Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 7 ஆம் நாள் | ரபி ஆகிர் 12 | (23-9-61) | சனிக்கிழமை | இதழ் 190

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானால்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# உபதேர்தலில் பிரதமர் போட்டியிட்டால்...

## யு. என். பி. எதிர்த்து போட்டியிடாது

### பார்லிமெண்டில் யு. என். பி. அங்கத்தவர் உத்தரவாதம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த ஒரு எம். பி. தமது ஸ்தானத்தை ராஜினாமாச் செய்து அதன் மூலம் நடைபெறும் இடைத் தேர்தலில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா போட்டியிட்டால் அவருக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி ஒரு அபேட்சகரைப் போட்டிக்கு நிறுத்த மாட்டாது என்று யு. என். பி. எம். பி. திரு. ஏ. இரத்தினயக்கா இன்று பார்லிமெண்டில் உத்தரவாதமளித்தார்.

புதிதாக இயற்றப்பட்டசட்டங்களின் புதிய சட்டத்தொகுப்பு அமுலுக்குவரும் காலத்தைக் குறிப்பிட்டு 'கஸட்'மூலம் கவர்னர் ஜெனரல் பிரகடனம் செய்வதற்கு கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கும் பிரேரணையொன்றை சபை முதல்வரும் பாதுகாப்புவெளிவிவகார அமைச்சின் பதில் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு. சி. பி. டி' சில்வா கொண்டு வந்தார்.

இப்பிரேரணைமீது வத்தேகம எம். பி. (யு. என். பி திரு. ஏ. ரத்னயக்கா பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். சட்டத் தொகுப்புபற்றிய பிரேரணையை பிரதம மந்திரி மட்டுமே சபையில் கொண்டுவர முடியுமென்றும் வேறெவருக்கும் அதிகாரமில்லையென்றும் கூறிய திரு. ரத்னயக்கா பிரதமர் ஒரு உப தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று சபைக்கு வரட்டுமென்றார்.

திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் இந்தச் சபையில் இயற்றப்பட்ட சட்டங்களைக் கொண்ட சட்ட தொகுப்புக்களை செனட்டிலுள்ள பிரதமர் இந்தச் சபையில் சமர்ப்பிப்பதற்கு உரிமையுண்டா? என்று கேட்டார். பிரதமர் இந்தச் சபையில் ஒரு அங்கத்தவராக இல்லாததால் வேறு எந்த மந்திரியும் அதை இந்தச்சபையில் சமர்ப்பிப்பதற்கு முடியாது என்று திரு. பிலிப கூறினார். அரசியல் திட்டப்படி செனட்சபையில் நீதிமந்திரியும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் பிரதம மந்திரியும் சமர்ப்பிக்கவேண்டும்" என்று கூறிய திரு. பிலிப் குணவர்த்தன, இச்சபையில் வேறு மந்திரி அதைச் சமர்ப்பிபபது ஒழுங்கானதா வென்பது தமக்குத் தெரியவில்லை யென்றார்

காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயக்கா சில விஷயங்களை கஸட் அறிக்கைமூலம் பிரகடனப்படுத்துவதற்கு கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரமளிக்கும் பிரேரணையொன்றை பதில் உதவிமந்திரி சமர்ப்பித்துள்ளாரென்றும் ஆனால் இம்மாதம் இருபதாம் திகதியே அவ்விஷயம் கஸட்டில் வெளியாகிவிட்டதென்றும் கூறினார்.

#### அட்டர்னி ஜெனரல் 'சரி' என்றார்

சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா பதிலளிக்கையில் அரசியல் திட்டத்தின் 1959 ம் வருடத் திருத்தத்தின்படி எந்த ஒரு மந்திரியின் அலுவல்களையும் பார்லிமெண்டரிக் காரியதரிசி நிறைவேற்ற முடியுமென்றும் தான் அட்டர்ணி ஜெனரலிடம் ஆலோசனை கேட்டதாகவும் அவர் 'சரி' என்று கூறியதாகவும் சொன்னார். இதுவிஷயத்தில் சட்ட ஆலோசனை பெறுவதாகவும் தெரிவித்தார்.

இப்பிரேரணையை சபையில் சமர்ப்பிப்பதற்காக அனுமதியளிப்பதாக உபசபாநாயகர் கூறினார்.

வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டுமென அங்கத்தவர்கள் கோரியதால் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

தீர்மானத்தை ஆதரித்து 14 வாக்குகளும் எதிராக எட்டு வாக்குகளும் கிடைத்தன. கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் ஆதரித்து வாக்களித்தனர். அச்சமயத்தில் சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் சபையில் இருக்கவில்லை

## யானைவிரட்டல் இன்று ஆரம்பம்

கொழும்பு வெள்ளி

தெதுறுஓயா யானை விரட்டும் வேலை நாளை ஆரம்பமாகிறது. இதுசம்பந்தமான வேலைகள் யாவும் தற்சமயம் பூர்த்தியாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெதுறுஓயா யானை விரட்டும் வேலை நாளை ஆரம்பமாவதற்கு முன்னர், நாளைக் காலை முன்னீஸ்வரம் ஆலயத்தில் இதற்கான விசேஷ வழிபாடுகள் நடைபெறும். இதைத் தொடர்ந்து முன்னீஸ்வரத்திலிருந்து யானை விரட்டும் வேலை ஆரம்பமாகும்.

இதுவரை இலங்கை கண்டிராத இப் பெரிய முயற்சியில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் தங்கள் உயிரையும் பாராது ஈடுபட்டிருக்கிறார்கள். நாளை ஆரம்பமாகும் இப் பெரும் முயற்சி எப்போது முடிவடையும் என்று தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும் செவ்வாய்க்கிழமையுடன் யானை விரட்டும் வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு ஐக்கிய கிளப் பிபிலியனில் நடைபெறும்.

---

## 'குழந்தைகளுக்கு இசை பயிற்றுங்கள்'

### பெற்றோருக்கு கலையரசு யோசனை

யாழ்ப்பாணம், சனி

"கலை வளர்ச்சியில் பெற்றோர் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். இசைக் கல்வியைத் தங்கள் குழந்தைகளுக்குப் பயிற்றுவித்துப் பெற்றோர் பயனடையவேண்டும். கலையை வளர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அவற்றைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் அதனைத் திரும்பவும் பெற முடியாது துக்கப்படவேண்டி வரும்"

இவ்வாறு நல்லூர் அண்ணாமலை இசைத்தமிழ்க் கல்லூரி பெற்றோர் தின விழவுக்குத் தலைமைவகித்துப் பேசிய கலையரசு சொர்ணலிங்கம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் இவ் விழா நடைபெற்றது.

திரு. சொர்ணலிங்கம் தொடர்ந்து பேசுகையில் இசைக் கல்லூரி ஒன்றில் பெற்றோர் தின விழா நடப்பது இலங்கையிலேயே இதுதான் முதல்தடவையாக இருக்குமெனவும் இக் கல்லூரியின் முயற்சியைப் பாராட்டியதோடு பிள்ளைகளை இசைக்கலை பயில அனுப்புவதில் பெற்றோர் சிரத்தை காட்ட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

செயலாளர் சங்கீத பூஷணம் ஆ. நமசிவாயம் நன்றி கூறினார்.

## கென்னடிக்கு 'பகவத்கீதை'

வாஷிங்டன், செப். 22

அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்கு பகவத்கீதை நூல் ஒன்றை அமெரிக்காவில் இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ள திரு. பி. கே. நேரு இன்று அன்பளிப்பாக வழங்கினார். திரு. கென்னடி அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

## லஞ்சஊழல் குற்றம் சாட்டப்பட்ட மராமத்து ஊழியர்

### மூவர் விசாரணை நடத்துவர்

கொழும்பு, வெள்ளி

லஞ்ச ஊழல், கவனக்குறைவு, முதலிய குற்றச்சாட்டுகளின்மீது வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட மராமத்து இலாகாவைச் சேர்ந்த 17 உத்தியோகத்தர்கள் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை செய்வதற்கு அரசாங்கசேவையைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட அதிகாரிகளை அரசாங்க சேவைக் கமிஷன் நியமித்துள்ளது.

மராமத்து இலாகா நடவடிக்கை பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட எச். ஏ. டி. சில்வா கமிஷன்சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு 17 உத்தியோகத்தர்களும் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டனர்.

16 மாதங்களின் முன் உத்தியோகத்திலிருந்து இவர்கள் நிறுத்திவைக்கப்பட்டனர்.

## இரண்டு நேரப் பள்ளிக்கூடம்

### பிள்ளைகளுக்குச் சிரமம்

கொழும்பு, வெள்ளி

இப்போதுள்ள பள்ளிக்கூட முறைகளை அரசாங்கம் மாற்றியமைக்கும்போது பள்ளிக்கூடங்களில் வகுப்புகள் இரண்டு நேரம் நடாத்தப்பட்டு வரும் முறையையும் மாற்றவிருக்கிறது. இவ்வருட ஆரம்பத்தில் நிறுவப்பட்ட இரண்டு நேர முறையானது திருப்தியளிக்கவில்லை எனக் கல்விப் பகுதி கண்டுள்ளது.

இரண்டு நேரப் பள்ளிக்கூட முறை, பிள்ளைகளுக்கு அதிக சிரமம் கொடுத்துள்ளது. பெரும்பாலும் பின்னேரப் பள்ளி செல்லும் மாணவர் பள்ளிக்கூட பாடங்களைவிட மற்றைய பள்ளிக்கூட நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக்கொள்ள வசதியற்றவர்களாகியிருக்கின்றனர். பின்னேரப் பள்ளிக்கூடங்கள் ஐந்துமணித்தியாலத்துக்குப் பதில் நாலரை மணித்தியாலமே நடத்தப்பட்டுவருகின்றன. பின்னேரப் பள்ளிக்கூடங்களில் வேலை குறைவாகவே நடைபெற்று வருகிறது எனப் பெற்றோர் பலர் குறை கூறியுள்ளனர்.

## மாகாண ஐக்கிய வங்கி

### ரூ. 40,279 லாபம்

திருக்கோணமலை, வெள்ளி

சென்ற வருடம் செப்டம்பர் மாதம் செயலாற்ற ஆரம்பித்த திருக்கோணமலை மாகாண ஐக்கிய வங்கி 10 மாதகாலத்துள் நாற்பதினாயிரத்து இருநூற்றெழுபத்தொன்பதுரூபாய் லாபமாகப் பெற்றுள்ளது.

வங்கி அங்கத்துவ சங்கங்களால் இக்காலப் பகுதியில் 80 புதுக்கணக்குகள் தொடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

டைரக்டர் சபைக்குப் பின்வருவோர் தெரிவு செயயப்பட்டுள்ளனர்.

அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்ட் (தலைவர்) முகாந்திரம் சி. முத்துக்குமாரு (உபதலைவர்) திரு. ஈ. சொக்கலிங்கம் (காரியதரிசி) திரு. ஜே. பி, பிரான்ஸிஸ், என். கைலாநாதன்.

11 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## 60 சதவிகிதம் பெண்கள்!

கொழும்பு, வெள்ளி

அரசினர் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் அறுபது சதவிகிதத்தினர் பெண்கள் என்று கல்வி இலாகா எடுத்த புள்ளிவிபரக் கணக்கிலிருந்து தெரிய வருகிறது.

---

## கலுகல்ல திரும்பினார்

கொழும்பு, வெள்ளி

இந்தியாவுக்குச் சென்றிருந்த போக்குவரத்து மராமத்து மந்திரி திரு பீ. பி. ஜீ கலுகல்ல நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

---

## நீச்சலில் புதிய சாதனை

### இங்கிலிஷ் கால்வாயை நீந்தித் திரும்பிய வீரர்

லண்டன், செப். 22

இங்கிலிஸ் கால்வாயை 42 வயதான அர்ஜென்டைனா நீச்சல் வீரர் ஒருவர் ஒரேமூச்சில் ஒரு கரையிலிருந்து மறு கரைககு நீந்திச்சென்று மீண்டும் அதே கரைக்குத் திரும்பி நீந்தி வந்துசேர்ந்து ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர் இச் சாதனையை 43 மணி நேரத்தில் நிகழ்த்தினார்.

பாகிஸ்தான் நீச்சல் வீரர் இதேகால்வாயை பிரஞ்சுக் கரையிலிருந்து பிரிட்டிஷ் கரைக்கு 10 மணி 35 நிமிஷ நேரத்தில் நீந்திக் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தினார்.




உ
சிவமயம்

**ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான**
**கோடியர்ச்சனை விஞ்ஞாபனம்**

ஆரம்ப தினம்: 23—10—61
பூர்த்தி தினம்: 5—2—62

இந்த அர்ச்சனையில் யந்திரத் தகடு வைத்து பூஜை செய்து கொடுக்கப்படும்.

சி. பாலசுப்ரமணியக் குருக்கள்.

**உங்கள் நோய்**

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**ஆயுள்வேத அரிய சாதனை**

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.




**வியாபாரம்பெருக விளம்பரம்செய்க**

**தேவை**

நல்ல அனுபவமுள்ள 'சிலிண்டர்' மெஷின் வேலை தெரிந்த ஒருவர் தேவை-ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

நல்ல அனுபவமுள்ள கலர் அச்சுவேலைகள் செய்யக்கூடிய 'பிளேட்டின்' மெஷின் வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை: ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

**காமெரா திருத்துதல்**

உங்கள் 'காமெரா'க்கள் எதுவாயிருந்தாலும் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் திருத்துவதற்கு, 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

அடைவு கடை அனுபவம் வாய்ந்த கணக்கர் ஒருவர் தேவை. காசுப் பிணை ரூபா 2500-00. மாதச் சம்பளம் ரூபா 125-00. 29-9-61க்கு முன் மனுச் செய்க: 433, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

**தேவை**

பிரபல தமிழ் ஹோட்டலுக்கு இடியப்பம், தோசை போட ஒருவரும், சப்ளைக்கு அனுபவமுள்ள இருவரும் உடன் தேவை. செல்வன் கபே, 50, பேராதனை வீதி, கண்டி.


## ஏயாசிலோன் சிப்பந்திகள்
### 81 பேர் வேலைநீக்கம்

கொழும்பு, வியாழன்

ஏயர் சிலோனைச்சேர்ந்த 81 சிப்பந்திகள் அக்டோபர் 8-ம் திகதி வேலைநீக்கம் செய்யப்படுவர். இவர்களது பெயர்களைக் கொண்ட பட்டியலொன்று ஏயர் சிலோன் தொழிலாளர் சங்கத்திற்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. வேலைநீக்கம் செய்யப்படும் தொழிலாளரில் பெரும்பாலோர் சிறுதரச் சிப்பந்திகளாவர்.

ஏயர் சிலோன் தொழிலாளர் சங்கத்திடம், சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள குறைகளைத்தெரிவிக்குமக்று ஏயர்சிலோன் நிர்வாகத்தினர் கேட்டுள்ளதாகச் சங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். ஏயர் சிலோன் சர்வதேச சேவை மூடப்பட்டுள்ளதற்கும், இச்சிப்பந்திகளை வேலைநீக்கம் செய்யப்படுவதற்கும் சிவில் ஏவியேஷனின் நிர்வாகத்தினரது திறமையற்ற தன்மையே காரணம் எனவும் ஏயர்சிலோன் தொழிலாளர் சங்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி ஆசிரியர்சங்க சங்கீத பேச்சுப்போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்படும் வருடாந்த பேச்சு, சங்கீதப் போட்டிகள் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடந்தன. போட்டிகளின் முடிவு பின்வருமாறு:-

பேச்சுப்போட்டி ஆங்கிலம்: சிரஷ்டபிரிவு என். செல்லையா, நெல்லியடி மத்திய வித்தியாலயம்.

மத்தியபிரிவு: சீ. பாலசுப்பிரமணியம், நெல்லியடி, மத்திய வித்தியாலயம். கே. பாலகிருஷ்ணன், நெல்லியடி, மத்திய வித்தியாலயம். வே. விவேகானந்தன், தேவரையாளி இந்துக்கல்லூரி.

கனிஷ்டபிரிவு: ஏ. ஆர். ஸ்ரீதரன், சிதம்பராக்கல்லூரி. ஏ. ஜெகநாதன், நெல்லியடி மத்தியகல்லூரி. எஸ். சிவசுப்பிரமணியம், நெல்லியடி, மத்திய கல்லூரி.

**பேச்சுப்போட்டி**

தமிழ் சிரேஷ்ட பிரிவு: எஸ். யோகரத்தினம், சிதம்பராக்கல்லூரி. ஏ. பாஸ்கரதாஸ், நெல்லியடி மத்தியகல்லூரி. எம் கணேசலிங்கம், தேவரையாளி இந்துக்கல்லூரி.

மத்தியபிரிவு: வி. விவேகானந்தன், தேவரையாளி இந்துக் கல்லூரி. எஸ். குணேந்திரராஜா, நெல்லியடி மத்தியகல்லூரி. கே. கணேசன், தேவரையாளி இந்துக்கல்லூரி.

கனிஷ்டபிரிவு: சாந்தசலாதன், தேவரையாளி இந்துக் கல்லூரி. வி. பரமசிகாமணி, சிதம்பராக்கல்லூரி. டி. பாலகங்காதரன், நெல்லியடி மத்தியகல்லூரி.

**சங்கீதப்போட்டி**

சிரேஷ்டபிரிவு: கே. கருணாகரன், நெல்லியடி, மத்தியகல்லூரி.

கனிஷ்டபிரிவு: டி. யோகசபாபதிப்பிள்ளை, சிதம்பராக்கல்லூரி. எஸ். கதிரமலை, நெல்லியடி, மத்தியகல்லூரி. எஸ். அமிர்தலிங்கம், நெல்லியடி, மத்தியகல்லூரி.

## நாவலப்பிட்டியில் பலாலி ஆசிரியபயிற்சிக் கோஷ்டி

நவாலப்பிட்டி, வெள்ளி

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேஷ பயிற்சி பெற்றுவரும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் கோஷ்டியினர் இன்று நாவலப்பிட்டிக்கு விஜயம் செய்தனர். கதிரேசன் கல்லூரியில் இவர்களுக்கு விருந்துபசாரம் அளித்து வரவேற்ப அளிக்கப்பட்டது. கதிரேசன் கல்லூரி அதிபர் மாணவர் கோஷ்டியினரை வரவேற்றுப் பேசினர்.

வட மத்திய மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் சரித்திர சம்பந்தமான இடங்களைப் பார்த்துக்கொண்ட இக்கோஷ்டியினர் மலை நாட்டிலும் நுவரெலியா. நாவலப்பிட்டி, கண்டி, நோட்டன் முதலான இடங்களுக்குச் சென்றனர். மலை நாட்டிற்கு முதன் முதலாக வந்த இக்கோஷ்டியிலுள்ள பலர் மலைநாட்டின் இயற்கை அழகு தங்களைக் கவர்ந்திருப்பதாகக் கூறினர். ஐம்பத்திரண்டு மாணவ, மாணவிகள் அடங்கிய இக்கோஷ்டியில் இரு பேராசிரியர்களும் உள்ளனர்.

## சதாசகாய மாதா பெருநாள் ஆரம்பம்

உடுப்பிட்டி, வெள்ளி

துன்னாலை சதாசகாய மாதா பெருநாள் இம்மாதம் 19-ந் திகதி ஆரம்பமாகியுள்ளது. 23-ந் திகதி இரவு வெஸ்பர். 24-ந் திகதி பாடற் பூசை, சற்றுப்பிரகாரம் இவற்றுடன் முடிவடையும்.

சமீபத்தில் கட்டப்பட்ட இக்கோயில் யாழ்ப்பாணத்திலேயே முதலாவது சதாசகாய மாதா கோயிலாகும்.

# ஆசிரியர்களுக்கிருந்த உரிமைகள்
## மீண்டுமளிக்கப்பட வேண்டுமெனக்கோரிக்கை
## யாழ்ப்பாண நகர ஆசிரியர் தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகர ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபொழுது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

1. அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுவரும் புதிய கல்வி அமைப்பின்படி வித்தியாதிபதியின் முகாமையிலுள்ள பாடசாலைகள் அரசாங்கத்திற்குரிய பாடசாலைகளாக் கப்படும் போது இப்பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு 20-7-1960 க்கு முன் இருந்து வந்த உரிமைகள் தொடர்ந்தும் இருந்து வரவேண்டுமென இச்சங்கம் கோருகின்றது. 2. 55 வயதுக்கும் 60 வயதுக்கும் இடையே உள்ள ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது கூடிய அளவுக்கு அவர்கள் ஒரு வருட இறுதியிலோ அல்லது ஒரு தவணை இறுதியிலோ ஓய்வு பெறுவதற்கு வகை செய்து ஓய்வு பெறும் விதிகளை இயற்றுமாறு இச் சங்கம் வித்தியாதிபதியைக் கோட்டுக்கொள்கின்றது. 3. தனியார் பாடசாலைகள் முன்பு மாணவர்களுக்கு அளித்து வந்த சேவைகளை அவை தொடர்ந்தும் மாணவர்களுக்கு அளித்து வருவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று இச் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றது.

1961-62 க்கு பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- திரு. வி. கார்த்திகேசு-வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம். உப தலைவர்கள்:- திரு. கே. சோமசுந்தரம்-சன்மார்க்க போதன ஆங்கில கலவன் பாடசாலை, திரு. கே. அருணாசலம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. காரியதரிசி:- திரு. பி. எஸ். குமாரசுவாமி- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. உதவிக் காரியதரிசி:- திரு. எஸ். பரநிருபசிங்கம்-பரமேஸ்வராக் கல்லூரி. தனாதிகாரி;- திரு. டபிள்யு. எஸ். செந்தில்நாதன்-வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்.

உதைபந்தாட்டம்:

## நாவலப்பிட்டியில் நாற்கோணப் போட்டி

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டியில் முதன் முதலாக நாற்கோண உதைபந்தாட்டப் போட்டியொன்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இப்போட்டிகள் செப்டம்பர் 30-ம் திகதியும், அக்டோபர் 1-ம் திகதியும் நடைபெறுமெனத் தெரிகிறது. கண்டியிலிருந்து இரு கோஷ்டிகளும், கம்பளையிலிருந்து ஒரு கோஷ்டியும், நாவலப்பிட்டியிலிருந்து ஒரு கோஷ்டியும் தெரிந்தெடுக்கப்பட்ட வீரர்களைக்கொண்டு இப்போட்டி நடத்தப்படுமெனத் தெரிகிறது. இப்போட்டி விளையாட்டிற்கான சகல ஒழுங்குகளையும் கவனிப்பதற்கு நகரப் பிரமுகர்கள், கல்லூரி அதிபர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இப்போட்டியில் வெற்றி பெறும் கோஷ்டிக்கு வெள்ளிக் கிண்ணப் பரிசில் வழங்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.

## கிராமசபைக்கு கவர்னர்ஜெனரல் பதில்

சுன்னாகம், வியாழன்

உடுவில் கிராமசபை செனட்டர் தெரிவு சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானத்தின் பிரதிகளை கவர்னர் ஜெனரலுக்கும் பிரதமமந்திரிக்கும் அனுப்பியிருந்தது.

இதற்கு கவர்னர் ஜெனரல் அனுப்பியிருந்த பதிலில் "உங்கள் கிராமசபையின் தீர்மானம் சம்பந்தமாக பிரதமமந்திரியுடன் பேசுகிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

இம்மாதம் 16-ந் திகதி உடுவில் கிராமசபையின் கூட்டம் உபதலைவர் டாக்டர் ஏ. நடராஜாவின் தலைமையில் கூடிய பொழுது கவர்னர் ஜெனரல் அனுப்பிய பதில் வாசித்துக் காட்டப்பட்டது.

"சிறுபான்மைத் தமிழர் என்று ஒரு இனம் இல்லை. எனவே சிறுபான்மைத் தமிழர் என்று பிரித்து எவருக்கும் செனட்டர் பதவி வழங்கவேண்டாம்" என்றுகோரும் பிரேரணையை ஆகஸ்ட் மாதக் கூட்டத்தில் திரு. ஆசிர்வாதம் ஹென்றி கொண்டுவந்திருந்தார். இத் தீர்மானம் நிறைவேறியது. இதன் பிரதிகள் தான் பிரதமருக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் அனுப்பப்பட்டிருந்தன.


**'சிரநேத்திராஞ்சன தைலம்'**

விடுதலையளிக்கும்போது நீங்கள்

சிரசு கண் மூக்கு சம்பந்தமான வியாதிகளினுல் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும் ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நிடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்:

**மு. க. ஜெகநாதன்**
யூனனி கண் நிபுணர்
பெரியகடை யாழ்ப்பாணம்

# அணு ஆயுத சோதனைகளைத் தடை செய்ய கோரும் இருபிரேரணைகள்

## ஐ.நா. பொதுச்சபையில் விவாதிக்கப்படும்

### இந்திய பிரேரணையை ரஷ்யா ஏற்கவில்லை

நியுயோர்க், செப். 22

அணுஆயுத பரிசோதனைத் தடை பற்றி இந்தியா கொண்டு வரும் ஒரு பிரேரணையையும், பிரிட்டனும் அமெரிக்காவும் கொண்டு வரும் மற்றொரு பிரேரணையையும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதற்கு ஐ. நா. கூட்ட நிகழ்ச்சி நிரல் ஆயத்தக் கமிட்டி ஏற்றுக் கொண்டது.

அணு ஆயுத சோதனைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் எவரும் நடத்தாதவாறு நிறுத்தி விட வேண்டுமென்பது இந்தியா கொண்டுவரும் பிரேரணை.

அணு ஆயுத சோதனைகளை சர்வதேசக் கட்டுப்பாட்டுடன் தடைசெய்ய வேண்டுமென்பது பிரிட்டனும் அமெரிக்காவும் கூட்டாகக் கொண்டு வரும் பிரேரணை.

இந்தியாவின் பிரேரணையைச் சமர்ப்பித்து இந்திய பாதுகாப்பு மந்திரியும் ஐ. நா. **வில் இந்தியக் கோஷ்டியின்** தலைமைப் பிரதிநிதியுமான திரு. வி. கே. கிருஷ்ண மேனன் பேசுகையில் பிரிட்டனும், **அமெரிக்காவும் கொண்டு வந்துள்ள பிரேரணையில்** போர்க் குமுறலின் ஒரு அம்சம் புலப்படுவதாகக் கூறினார்.

'அணு ஆயுதங்களும் ஹைட்ரஜன் குண்டுகளும் பரீட்சை செய்யப்படுவதை சகல நாடுகளும் தாமாகவே நிறுத்திக் கொள்ள வேண்டும். நிறுத்தப்பட்டிருந்த அணு ஆயுத சோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது கவலையைத் தருகிறது. மீண்டும் இக் குண்டுப் பரீட்சைகளை அவைகள் தாமாகவே நிறுத்திக் கொள்ளுமென நம்புவோம்' என்று திரு. மேனன் கூறினார்.

**ரஷ்யப் பிரதிநிதி ஆதரிக்கவில்லை**

சோவியத் யூனியனின் பிரதிநிதி திரு. ஸோரின் பேசுகையில்பிரிட்டனும் அமெரிக்காவும் கொண்டுவரும் பிரேரணைக்கும் இந்தியாவின் பிரேரணைக்கும் வேறுபாடு இருப்பினும் இந்தியாவின் பிரேரணையை தாம் ஏற்பதற்கில்லையென்றார்.

"படை குறைப்பு இல்லாமல் அணு ஆயுத சோதனைகளை தடை செய்வதில் அர்த்தமில்லை" என்று திரு. ஸோரின் கூறினார்.

**இதர விஷயங்கள்**

ஓமனில் பிரிட்டன் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாக அரபு நாடுகள் தாக்கல் செய்துள்ள குற்றச் சாட்டு பற்றியும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கை, தென்னாபிரிக்காவிலுள்ள இந்திய, பாகிஸ்தானியர்களை தென்னாபிரிக்க அரசாங்கம் நடத்தும் முறை, அங்கோலா பிரச்சினை ஆகியவைகளையும் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதென்றும் ஆயத்தக் கமிட்டி முடிவு செய்தது.



1. காங்கோ 2. அங்கோலா 3. ரொடீஷியா (ரொடிஷியாவில்தான் விமான விபத்தில் திரு.ஹமர் ஷீல்ட் உயிரிழந்தார்.)

## "தாராசிங் உடல்நிலை ஆபத்தாக உள்ளது"

### பட்டியாலா மகாராஜாவின் சமரச முயற்சி தோல்வி

புதுடில்லி, செப். 22

"எந்த ஆலயத்தையும் தனி நபரோ அல்லது ஸ்தாபனமோ அரசியல நோக்கத்துக்காக உபயோகிக்கக் கூடாது" என்னும் தனி நபர் தீர்மானமொன்று கிழக்கு பஞ்சாப் சட்ட சபையில் நிறைவேறியது.

பஞ்சாபி ராஜ்யக் கோரிக்கைக்காக அமிர்தசரசிலுள்ள சீக்கியரின் பொற்கோவிலில் சென்ற 39 தினங்களாக உண்ணாவிரதமிருந்து வரும் அகாலிடால் இயக்கத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கின் உடல்நிலை 'அபாயகரமான' நிலையை அடைந்துள்ளதாக நேற்று வெளியான வைத்திய அறிக்கையொன்று அறிவிக்கிறது.

பஞ்சாபிசுபா பிரச்சினையில் சமரசம் ஏற்படுத்த முயற்சி செய்த பட்டியாலா மகாராஜா புதுடில்லியில் உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு பட்டியாலாவுக்குத் திரும்பிவிட்டார்.

'தமது சமரச முயற்சி அநேகமாகத் தோல்வியடைந்து விட்டது' என்று அவர் தெரிவித்தார்.

## தேசிய அபிவிருந்தி சபை மீண்டும் நிறுவ யோசனை

கொழும்பு, வியாழன்

சென்ற வருடம் ரத்துச்செய்யப்பட்ட தேசிய அபிவிருத்தி சபை மீண்டும் நிறுவுவதற்கு அரசாங்கம் ஆலோசனைசெய்து வருகிறது. அபிவிருத்தி வேலைகளை ஊக்குவிப்பதற்கும் முன்னேற்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் தேசிய அபிவிருத்தி சபையை மீண்டும் நிறுவினால் உதவியாகவிருக்கும் என அரசாங்கம் கருதுகிறது.

அபிவிருத்தி சபையில் தலைவர் உட்பட குறைந்தது ஏழு பேர் என்றாலும் அங்கத்துவம் வகிப்பர் என அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

நிதிமந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இலங்கை திரும்பியதும் அவருடன் கலந்தாலோசனை செய்த பின்னரே தேசிய அபிவிருத்தி சபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிய வருகிறது.

தேசிய அபிவிருத்தி சபை நிறுவப்பட்ட பின்னர் பல இலாகாக்களின் அபிவிருத்தி திட்டக் கமிட்டிகளும் ஆலோசக சபைகளாகக் கடமையாற்றுமெனத் தெரிகிறது.

அரசாங்கம் திட்டமிட்டுள்ள அபிவிருத்தியில் ஊக்கம்செலுத்துவதாயின் தேசிய அபிவிருத்தி சபையை மீண்டும் நிறுவ வேண்டும் என எதிர்க்கட்சியினர் பல சந்தர்ப்பங்களில் கூறினர்.

## டிகோலின் சில அதிகாரங்கள்

பாரிஸ், செப். 21

சென்ற ஏப்ரல் மாதத்தில் அல்ஜீரியாவில் ஏற்பட்டு தோல்வியில் முடிவடைந்த புரட்சி ஆரம்பமான சமயம் தன்வசம் எடுத்துக்கொண்ட அவசரகால அதிகாரங்கள் சிலவற்றை ஜனாதிபதி டிகோல் மீண்டும் அந்த அதிகாரகளை பார்லிமெண்டுக்குக் கொடுத்து விடப்போவதாக அறிவித்துள்ளார்.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி டிகோலைக் கொலைசெய்ய எடுக்கப்பட்ட முயற்சிபற்றி சிறிதும் கவலைப்பட்டவராக ஜெனரல் டிகோல் தோன்றவில்லை. அடுத்த நான்கு தினங்களை அவர் பிரான்சின் சில கரையோரப் பகுதி நகரங்களில் கழிப்பார்.

## வீடு இடிந்து விழுந்து 5 குழந்தைகளின் தாய் மரணம்

கொழும்பு, வியாழன்

பய்யாகலையில் நேற்று ஐந்து வீடுகள் இடிந்துவிழுந்ததில் ஐந்து குழந்தைகளுக்குத் தாயாரான ஒரு பெண் உயிரிழந்தார். மற்றும் பலர் காயமடைந்தனர். அந்தத் தாயாருடன் நித்திரை செய்துகொண்டிருந்த இரண்டு வயதுக் குழந்தை பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. வீடுகள் இடிந்து விழுந்தசமயம் அங்கிருந்தவர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருந்தனர்.

## அல்ஜியர்ஸ் பொலிஸ் அதிபர் கொலை

பாரிஸ், செப். 21

அல்ஜியர்ஸில் பொலிஸ் கமிஷனர் கொலை செய்யப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டார். அல்ஜீரியா சம்பந்தமாக ஜனாதிபதி டிகோலின் கொள்கையை எதிர்க்கும் அல்ஜீரியாவிலுள்ள ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனமான 'ஓ. ஏ. எஸ்.' என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட முக்கோணக் காகிதம் ஒன்று அவர் கொலையுண்டு கிடந்த இடத்தில் காணப்பட்டது.

## குரோமிக்கோ-டீன் சந்திப்பு

### நாலரைமணிநேரம் பேசினர்

நியுயோர்க், செப். 22

சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோவும் அமெரிக்கவெளிவிவகாரமந்திரி திரு. டீன்றஸ்க்கும் நேற்று **இங்கு சந்தித்து நாலரை மணி** நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேர்லின் பிரச்சினை உட்பட உலக நெருக்கடிக்குக்காரணமாகவுள்ள சர்வதேசப் பிரச்சினைகள் பற்றி அவர்களிருவரும் பேசியதாக அறியப்படுகிறது.

இவர்களிருவரும் மீண்டும் அடுத்தவாரம் சந்தித்துப்பேசுவர்.

இரு நாடுகளுக்குமிடையிலுள்ள பலபிரச்சினைகள் பற்றி தாங்களிருவரும் பேசியதாக திரு. குரோமிக்கோ பின்னர் தெரிவித்தார். இதற்குமேல் விபரம் எதையும் கூறுவதற்கு அவர் மறுத்துவிட்டார்.

## புதுடில்லியில் ஹரிமன்

புதுடில்லி, செப். 22

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் விசேஷ பிரதிநிதி திரு. அவரேல் ஹரிமன் இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார்.

லாவோஸ் மன்னர் சவன்ன வத்தனாவுடன் லுவாங்பிரபாங்கில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு லாவோஸ் தலைநகரான வியன்டையினில் லாவோஸ் வலதுசாரித்தலைவர்களைச் சந்தித்தபின் திரு. ஹரிமன் புதுடில்லி வந்துள்ளார். லாவோஸ் பற்றி அவர் பிரதமர் நேருவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

லாவோஸூக்கான 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷன் மகாநாட்டில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் அடுத்த மழைக்காலத்துக்கு முன்னர் லாவோஸில் கலப்பு அரசாங்கம் அமைக்கப்பட்டு விடுமெனத்தாம் நம்புவதாகவும் திரு. ஹரிமன் விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறினர்.

## ஐ. நா. சபையில் கென்னடி

நியுயோர்க், செப். 22

ஐ. நா. பொதுச் சபையில் உலக விவகாரங்கள் பற்றிய பொதுவிவாதம் இன்று ஆரம்பமாகிறது. அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன். எப். கென்னடி திங்கட்கிழமை ஐ. நா. சபையில் உரைநிகழ்த்துவார்.

## விவசாயப் பயிற்சிபெற்றோர்

### பார்லிமெண்டில் அமைச்சர் விளக்கம்

கொழும்பு, வியாழன்

ஜனப்பிரதிநிதிகள் சபையின் இன்றைய கூட்டத்தில் திரு. வி. பி. ஆர். வீரசேகராவின் கேள்விபொன்றுக்குக் காணி அபிவிருத்தி மந்திரியின் சார்பில் இணைவு வர்த்தக அமைச்சர் **இலங்கரத்தின பதிலளிக்கையில் பண்ணை வேலையில்** இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் அரசாங்க விவசாய பண்ணை பகடசாலைகள் அவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதாக உறுதியளிக்கவில்லையென்றார். பயிற்சி பெற்றவர்கள் காணிக் கச்சேரிகளில் காணிபெறுவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் பயிற்சிபெற்றவர்களில் எழுபத்தைந்து சதவிகிதத்தினர் வேலைதேடிக்கொண்டனரென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## குழவி கொட்டியதால் மரணம்

நாவலப்பிட்டி, வெள்ளி

தொளஸ்பாகை கெல்லி குருப்பிலுள்ள வடிவேலு என்ற தோட்ட வாலிபர் ஒருவர் குழவி கொட்டியதால் மரணமடைந்த சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. குழவிக் கூட்டை எரிப்பதற்கு மரத்தில் ஏறிய போதுதான் இச்சம்பவம் நடைபெற்றது. பிரக்ஞையற்ற நிலையில் தொளஸ்பாகை ஆஸ்பத்திரிக்கு தோட்டத்து லொறியில் எடுத்துச் செல்லப்பட்டாரெனினும் பன்னிரண்டு மணித்தியாலங்களுள் மரணமடைந்தார்.



ஹமர்ஷீல்ட் படுகொலை

### மணிவாக்கு

பெண்மை வாழ்கென்று கூத்
திடுவோமடா!
பெண்மை வெல்கென்று
கூத்திடுவோமடா!
தண்மை இன்பம் நற்
புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் ஸதியென்ற
நாமமும்

—மகாகவி பாரதியார்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
புரட்டாசி மீ 7 உ (23-9-61)

EEL NADU: National Tamil Da y Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.


## அரசியல் திருத்த கூட்டுக் கமிட்டி

1946ம் வருடத்திய இலங்கை அரசியல் திட்டத்தைத்திருத்தி அமைக்க செனட் சபை, ஜனப் பிரதிநிதிசபை இவற்றின் மெம்பர்களடங்கிய ஒரு கூட்டுக் கமிட்டியை அமைப்பதென்று இரு சபைகளிலும் நிறைவேற்றியுள்ள தீர்மானம் வரவேற்கத் தக்கது. சில வருடங்களுக்கு முன்பே இவ்வித கூட்டுக் கமிட்டி நியமிக்கப்பட்டு, அதன் வேலைகள் அரைகுறையாக முடிந்தன. புதிய கமிட்டியின் வேலைகள் அப்படியின்றி, நாட்டில் சமூக ஒற்றுமையும் அமைதியும் பலப்படும் முறையில், அரசியல் திட்டத்தை தக்கபடி திருத்தி அமைக்க உதவுமென்றே நம்புவோம்.

அரசியல் பற்றி அவசியமாகக் கருதும் எந்த விஷயத்தையும் பரிசீலனை செய்ய இக் கமிட்டிக்கு அதிகாரமும் உரிமையும் அளிக்கப்பட்டிருப்பது மற்றோர் வரவேற்கத்தக்க விஷயமாகும். 1. குடியரசு அமைத்தல், 2. அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல், 3. செனட் சபை நிலைமை; ஜனப்பிரதிநிதி சபையில் நியமன அங்கத்தவர், 4. பப்ளிக் சர்வீஸ் கமிஷன்; நீதி சர்வீஸ் கமிஷன் இவை பற்றியும், கமிட்டி அவசியமெனக் கருதும் வேறு எந்த விஷயம் பற்றியும் பரிசீலனை செய்ய இக் கமிட்டிக்கு அதிகாரமிருக்குமென்று தீர்மானம் கூறுகின்றது. இப்போது எல்லோருக்கும் மண்டையிடி கொடுப்பது மொழிப்பிரச்சினையே. இதைத் தீர்க்க இக் கமிட்டி மூலம் புதிய முயற்சியைச் செய்யலாம்.

சர்வ கட்சிக் கூட்டம் இதற்காகக் கூட்ட வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் கூறிவருகிறார். அரசியல் கமிட்டியில் எல்லாக் கட்சியினருக்கும் இடமிருக்குமென்று அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டது. அப்படியாயின் இதுவும் ஒரு சர்வ கட்சி கூட்டமாகவே இருக்கலாம் குறுகிய வகுப்புவாத, கட்சி மனப்பான்மையின்றி, விரிந்த மனதுடனும் அரசியல் ஞானத்துடனும் பரஸ்பரம் விட்டுக் கொடுப்பதாயின், மொழி முதலிய பல சிக்கலான விஷயங்களையும் இக் கமிட்டி மூலம் தீர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்புண்டு. பிரதேச சபை போன்ற விஷயங்களையும் இதில் தீர்மானித்துக்கொள்ளலாம்.

இந்த அரசியல் கூட்டுக் கமிட்டியில் மொத்தம் எவ்வளவு பேர் இருப்பரென்பது திட்டப்படுத்தப்படவில்லை. செனட் சபை எவ்வளவு மெம்பர்களை கமிட்டிக்கு நியமிக்குமென்றும் தெரியவில்லை. ஜனப்பிரதிநிதி சபையின் 11 மெம்பர்கள் இக் கமிட்டிக்கு நியமிக்கப்பெறுவரென்று தீர்மானம்கூறினலும், இது பற்றி சபையையும், பல கட்சியினரையும் கலந்தாலோசிப்பதாகவும் அரசாங்கத்தின் சார்பாகக் கூறப்பட்டது. ஜனப் பிரதிநிதி சபையில் எதிர்க் கட்சியிலே இரண்டாவது பெரிய கட்சியாகவுள்ள தமிழரசுக் கட்சிக்கும் பிரதிநிதித்துவமளிக்கப்படுமா? என்று உடுப்பிட்டி மெம்பர் கேட்டதற்கு, எல்லாக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்குமென்றே அரசாங்கம் நம்புவதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்தார். அக் கட்சி மீதுள்ள தடை சீக்கிரம் நீக்கப்பட்டு, அதன் ஒத்துழைப்பும் கோரப்படுமென்ற புதிய நம்பிக்கை இதனல் பிறப்பதாகவுள்ளது.

இந்த அரசியல் அமைப்புக் கூட்டுக் கமிட்டியிலே பலவித கருத்துள்ளவர்களுமிருப்பர். கேவலம், மெஜரிட்டி பலத்தால் எல்லா விஷயங்களையும் முடிவு செய்யாமல், மனம் விட்டுப் பேசி, நாட்டு நன்மைக்கான முறையில் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து சமரசமான முடிவுகளைச் செய்ய வேண்டும். அப்போதே எதிர்காலத்தில் மீண்டும் முட்டுக்கட்டைகள் ஏற்படாமல், நாட்டை முன்னேற்றப்படுத்தக் கூடிய மேலான அரசியல் திட்டத்தை உருவாக்க முடியும்.

# ஆராய்ச்சியில் அடிகளார் இன்பம்

## சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில்ஆக்க ஆர்வம்

**'ஆராய்ச்சித்துறையிலேயே எனக்குப் பெருமகிழ்ச்சி' யெனத் தனிநாயக அடிகளார் 'ஈழநாடு' மலாயா நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார். மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய பிரிவுக்கு அடிகளார் தலைவராக இருப்பது வாசகர்கள் அறிந்ததே.**

ஆயிரக்கணக்கான தமிழ், ஆங்கில நூல்களுக்கு நடுவில், சுமார் இரண்டு லட்சம் மைல்களுக்குமேல் விமானத்தில் 30 நாடுகளுக்குமேல் பன்முறை பிரயாணஞ்செய்து அந்தந்த நாடுகளில் பெற்ற தேசியச்சின்னங்கள் பரப்பிவைக்கப்பட்டிருக்கும் மேஜை எதிரில் தமது இல்லத்தில் அமர்ந்திருந்த தவத்திரு தனிநாயக அடிகளாரிடம் 'தங்களுக்கு மகிழ்ச்சி எதில்?' என்ற முதல் கேள்வியைக் கேட்டேன்.

'தங்கள் கேள்விக்கு விடை கொடுப்பது எளிதன்று. பல துறைகளில் எனக்கு மகிழ்ச்சி உண்டு. இலக்கியத்துறை, பண்பாட்டுத்துறை, உரிமைத்துறை என்பனவற்றில் பொதுவாக ஆராயும்போது, ஆராய்ச்சி துறையிலேயே எனக்குப் பெரும் மகிழ்ச்சி எனக் கூறுதல் தகும்.

ஆராய்ச்சி' இன்பம் என்று சொல்வார்களே (Joy of Discovery) இம்மகிழ்ச்சியே எனக்குப் பெரும் மகிழ்ச்சியளிப்பதாகும் என அடிகளார் கூறினார்.

அடிகளார் மேலும் கூறியதாவது:-

### நாடுகள் இல்லை

இடைக்காலத்தில் புதுநாடுகளைக் காணச்சென்றனர் மாலுமிகளும், வேறு செலவு செய்வோரும். இன்று புதிதாகக் கண்டுபிடிப்பதற்கு நாடுகள் இல்லை. ஆயினும் பிறந்த நாட்டைவிட்டு வேறுநாடுகளுக்குச் செல்வதில் இத்தகைய ஆராய்ச்சி இன்பம் ஒருவாறு உண்டு.

புது மக்களைக் காண்பது, புதுமொழிகளைப் பயில்வது, மொழிகளிடம் புதுத்தொடர்புகளைக் காண்பது இவையெல்லாம் ஆராய்ச்சி இன்பத்தில் அடங்கும். பிறர் கண்டுபிடித்த பொருள்களையும் கருத்துக்களையும் தானே கண்டுபிடித்தாலும் இவ்வாராய்ச்சி இன்பத்திலும் அடங்கும்.

எனவே பிறநாடுகளுக்குச் செல்வதிலும், பிறமொழிகளைப் பயில்வதிலும், பிறர்காணாத தொடர்புகளைக் கண்டு கூறுவதிலும் எனக்கு மகிழ்ச்சி நிறைவு உண்டு.

இம்மகிழ்ச்சியே தமிழ் ஆராய்ச்சியிலும் அடைந்து வருகின்றேன். ஆதலால் இப் புதுமையைக் காண்பதற்குப் பழமையை ஆராய்கிறேன். பெரும்பாலும் இம்மகிழ்ச்சியையே பழமையை ஆராய்வதிலும், அடிச்சொற்களிலும், மிகப் பழைய



தனிநாயகம் அடிகளார்

இலக்கியங்களிலும் அடைகிறேன்.

### சங்ககால இலக்கியம்

இடைக்கால இலக்கியத்தைக்காட்டிலும் சங்ககால இலக்கியத்திலேயே எனக்கு ஈடுபாடு உண்டு.

எடுத்துக்காட்டாக, கோவலன் கோவேறு கழுதைமீது கடலாடு விழாவிற்குச் சென்றான் எனச் சிலம்பில் கூறப்பட்டுள்ளது. கோவேறுகழுதை, 'அரசன் ஏறும் கழுதை' என்று இக்காலத்தில் பொருட்படுத்தியதாக எனக்குத் தெரியவில்லை. அடியார்க்கு நல்லார் இதனை 'அரச வாகனம்' என்று கூறுகின்றார். இச்சொல்லின் அமைப்பையும், பண்டைக்கால வழக்கையும் உணர்ந்து பெரும் மகிழ்ச்சியடைந்தேன்.

இவ்வாறு பல பழந்தமிழ்ச் சொற்கள் எனக்கு அளவு கடந்த இன்பத்தைத் தருகின்றன. நம் மொழியின் தத்துவ அமைப்பும் வளர்ச்சியும் பண்டைய சொற்களில் தோன்றுகின்றன.

இத்தகையமகிழ்ச்சியின் ஊக்கத்தால்தான் தமிழ்ப்பண்பாட்டின் பழைய சின்னங்களையும் தமிழிலக்கியத்தின் பழைய சுவடிகளையும், அச்சுப்படிகளையும் கண்டெடுப்பதில் ஈடுபடுவதாக நம்புகின்றேன்.

கேள்வி: இத்துறையில் குறிப்பிடத்தக்க பயன் ஏதும் கிட்டியிருக்கிறதா? தங்கள் கைக்குச் சுவடிகளோ அன்றி அச்சுப்படிகளோ கிடைத்தனவா?

பதில்: பயன்தரத்தக்க முறையில் கிடைத்திருக்கின்றன என்றே சொல்லவேண்டும். 16-ம் நூற்றாண்டில் தமிழ் நூல்கள் அச்சேறின என்று

(5ம் பக்கம் பார்க்க)

~ இரத்தினக் கம்பளம் ~

## சொந்த அனுபவம்

பதுமன்

தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியுமென்று சொல்லுவார்கள். அரசனுக்குக் குடிகளின் கஷ்டம் தெரியாது. முதலாளிக்குத் தொழிலாளியின் இன்னல்கள் எங்கே விளங்கப்போகின்றது. ஒரு சில எம். பி.க்கள் மக்கள் படும் அவஸ்தையை அறியமாட்டார்கள். ஆனல் தங்களுக்கு ஒரு கஷ்டம் வரும் போதுதான் 'ஐயோ இப்படியும் நடக்கின்றதே' என்று எண்ணுவார்கள். எதற்காக இதனை எழுதுகின்றேன் என்ருல் சென்ற செவ்வாய்க் கிழமை செனட்டில் பேசிய இரண்டு மூன்று செனட்டர்களின் சோகக் கதைகளைச் சொல்லுவதற்காகவேதான்.

⁂ ⁂ ⁂

### செனட்டர் பேசுகின்ருர்

செனட்டர் ஜயசூரியாவின் கதையைக் கேளுங்கள்.

"சில நாட்களுக்கு முன்னர் மணிஓடர் ஒன்றை மாற்றுவதற்காகத் தபால் நிலயத்துக்கு நான் சென்றேன். அங்கு ஐந்து குமாஸ்தாக்கள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அசையமாட்டார்கள் என்பதைக் கண்டு நான் போஸ்ட் மாஸ்டரிடம் நேரே சென்றேன்.

"அவர் சொன்னர், எங்கள் இருவருக்கும் அறிமுகமான ஒருவர் மணிஓடரில் கைச்சாத்திட வேண்டுமென்று. இது காரணமாக எங்கள் இருவருக்கும் பெரிய வாக்குவாதம் எழுந்தது. ஈற்றில் போஸ்ட் மாஸ்டர்தான் வெற்றி கண்டார். அந்த நான் நான் அந்த மணிஓடரை வங்கியிற் போடவேண்டியதாயிற்று."

செனட்டர் ஒருவரே போஸ்ட்மாஸ்டரிடம் இப்படிச் சிக்கித் தவித்தார் என்ருல் எம் போன்ற சாதாரண மக்களின் கதி என்ன?

⁂ ⁂ ⁂

### மற்ரெரு சம்பவம்

செனட்டர் ஜி. நல்லையா செனட்டில் முறையிட்டதையும் இச்சந்தர்ப்பத்தில் அறிந்து கொள்வது நன்று. செனட்டர் நல்லையா பேசுகின்ருர் கேளுங்கள்:

"எனது வேலைக்காரச் சிறுவன் அன்ரெரு நாள் ரயிலில் பிரயாணம் செய்தான். அவனுக்குரிய பிரயாணச் சீட்டைத் தமிழில் எழுதிக்கொடுத்திருந்தேன். அப்படியிருந்தும் அவனிடம் கட்டணம் அறவிடப்பட்டது. நான் இதுவிஷயத்தை நீதிமந்திரிக்குத் தெரிவித்திருந்தேன். இதுவரை ஒரு பதிலும் கிடைக்கவில்லை!"

⁂ ⁂ ⁂

### தாய்மை எங்கே?

அவசரகால நிலைமையைப் பற்றி செனட்டர் நல்லையா பேசியபோது உருக்கமான ஒரு சங்கதியைக் குறிப்பிட்டிருந்தார். திருமதி அமிர்தலிங்கம் இரு குழந்தைகளுக்குத் தாய் எனவும், அவர் ஐந்து மாதங்களாகத் தடுப்புக் காவலில் இருந்து வருகின்ருர் எனவும் அவர் உணர்ச்சியுடன் தெரிவித்தார். பிரதமரும் பிள்ளைகளுக்குத் தாயாகவே விளங்குகின்ருர் என்பதை அவர் நினைவூட்டி திருமதி அமிர்தலிங்கம் பெற்றெடுத்த குழந்தைகளைப் பிரிந்து இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படி இருப்பது எனவும் கேட்டார். பதிலே இல்லை!

⁂ ⁂ ⁂

### அழிவை நோக்கி..

இலங்கை அழிவை நோக்கிச் செல்லுகின்றதென வித்தி

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

வருகிற தை மாதத்தில் அதாவது பிப்ரவரி 3, 4, 5 திகதிகளில் எட்டுக் கிரகங்களும் ஒரே மகர இராசியில் சேருகின்றனவாம். இதனல் பல தீய பயன்கள் ஏற்படுமென்றும் அக்னி, ஆயுதம், ஏவாயுதம் ஆகியவற்றினல் ஜீவகோடிகள் மாளுமென்றும், கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் கோர யுத்தங்கள் ஏற்படுமென்றும், நம்மைப் பயமுறுத்துகிருர்கள்.

இப்போது காங்கோவில் ஹமர்ஷீல்ட் கொல்லப்பட்டதை மூலகாரணமாகக் கொண்டு மூன்ருவது அணுகுண்டு யுத்தம் ஆரம்பமாகலாமென்றும் ஒரு நண்பர் சோதிடம் கூறுகின்ருர். இரு போட்டி வல்லரசுகளின் போக்கையும் பார்க்கையில் இந்தச் சோதிடங்கள் எல்லாம் உண்மையாகலாம் என்றும் தோன்றுகின்றது.

* * *

இதற்கு நாம் என்ன செய்யலாம்? அவனன்றி ஓரணுவும் அசையாது, கருணாநிதியான கடவுள்தான் உலகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று ஏதேதோ சிந்தனை செய்து கொண்டிருக்கையில், முன்னேச்வரத்திலிருந்து இரு அன்பர்கள் வந்தனர். ஸ்ரீ வடிவாம்பிகையும் முன்னநாத சுவாமியும் அவர்கள் மூலம் அன்புடன் பிரசாதமனுப்பியிருந்தார்கள். கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்ய எனக்கு வசதியில்லை என்பது அவர்களுக்குத் தெரியும் தானே. அதனல் நான் இருக்குமிடம் தேடியே, தங்கள் அருட் பிரசாரத்தை அனுப்பிவிட்டனர். என்ன கருணை!

கருணைக் கடலான ஆண்டவன் இருக்கையில், நாளென் செயும், வினைதான் என் செயும், எனை நாடிவந்த கோள் என் செய்யும், கொடுங்கூற்று என் செயும். வருகிறதெல்லாம் வரட்டும் என்று ஏதேதோ எண்ணங்கள் வந்தன.

ஆனல் நம்மில் பலருக்கும் கடவுளைப் பற்றிய மறதி அடிக்கடி வந்துவிடுகிறது. அதனல் தான் கவலையும் கலக்கமும். அவரை மறக்காமலும் கிரகங்களால் தீமை ஏற்படாமலும் அவன் அருளைப்பெற கோடி அர்ச்சனை முன்னேச்சரம் கோவிலில் அடுத்த மாதம் முதல் நடப்பதாகவும் இரு அன்பர்களும் தெரிவித்தனர் அங்குசிங்களப்பக்தர்கள் வருகிருர்களா? என்று கேட்டதற்கு 100க்கு 90 உபயங்களை சிங்களவர்களே வழி வழியாகச் செய்ததாயும் 1958-ம் வருட கலகத்திலும் 40 மைல் சுற்றுவட்டத்தில் அமைதியாகவே இருந்ததாயும், தெரிவித்தனர்.

மதுரை மீனட்சி கோவிலிலும் இவ்விதம் கோடி அர்ச்சனை நடக்கிறதாம். மதுரை மீனட்சியும், வடிவாம்பிகையும் உலகத்தைக் காப்பாற்றட்டும். தெய்வத்தைத் தவிர நம்மைக் காக்க யார் இருக்கிருர்கள்!

* * *

லண்டன் லார்டு மேயரான சர் பெர்னுடுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுத வேண்டும் போல் மனம் உந்தியது. நீங்களும் படிக்கலாம்.

சேர் பெர்னுட்,
லார்டுமேயர்,
லண்டன்.

லார்டு மேயர் அவர்களே!

தாங்கள் கல்கத்தா வந்திருக்கையிலே கவர்னர் செல்வி பதுமாஜா நாயுடு தங்களுக்கு ஒரு விருந்து கொடுத்தாரல்லவா! அங்கு பிரதமர் நேருவுக்கு பகிரங்கமாக ஒரு நல்ல "டோஸ்" கொடுத்தீர்கள்,

அணுகுண்டை எதிர்த்து பெட்ரண்ட் ரஸ்ஸல் பிரபு சத்தியாக்கிரகம் செய்து சிறைப்பட்டால் அதுபற்றிப் பொருமைப்பட நேரு யார்? அது பிரிட்டனின் உள்நாட்டு விஷ

(5ம் பக்கம் பார்க்க)

புங்குடுதீவு கொலைவழக்கில்

# எதிரிசார்பில் வழக்கறிஞர் இல்லை

## விசாரணை 5ம் திகதி ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரத்தில் வசிக்கும் சிற்றம்பலம் என்பவரின் மனைவி அன்னம்மாவை (வயது 32)க் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக, அதேயிடத்தைச் சேர்ந்த கள்ளிறக்கும் தொழிலாளியான முத்தையா-இரத்தினத்தின் மீது குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் திரு. அரசு உவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஒரு குழந்தைக்குத் தாயாரான அன்னம்மா பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமான இவ் வழக்கைப் பார்ப்பதற்குத் திரளானோர் வந்திருந்தனர்.

இந்த வழக்கில் எதிரிக்காக வாதாட வழக்கறிஞர் இல்லாமையை நீதிபதி எடுத்துக்காட்டி ஒரு வழக்கறிஞரை உமக்காக ஏற்படுத்துமாறு எதிரியைப் பார்த்து கூறினர். தமக்கு உதவி செய்ய எவருமில்லை என எதிரி கூறினர்.

நீதிபதி இருதரப்பினரையும் அடுத்த மாதம் 5ந் தேதி விசாரணைக்கு ஆயத்தமாக வரும்படி கூறி எதிரியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# ஆராய்ச்சியில் அடிகளார் இன்பம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அறிஞர் அறிந்திருந்தாராயினும், அவ்வேடுகளை யாரும் கண்டிலர். வத்திக்கான் நூல் நிலையத்தில் ஆராய்ந்து 1587ம் ஆண்டு தூத்துக்குடியில் அச்சிடப்பெற்ற 660 பக்கங்கள் அடங்கிய நூலைக் கண்டபோது மாலுமிகள் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது அடைந்த இன்பத்தைப்போன்ற இன்பத்தை நான் அடைந்தேன்.

### நான்கு நூல்கள்

இன்று 16-ம் நூற்ருண்டில் அச்சேறிய நான்கு நூல்களின் படிகள் என்னிடம் உண்டு. 16ம், 17ம் நூற்ருண்டில் 17 நூல்கள் அச்சிடப்பெற்றன என்றும், அவற்றைத் தூத்துக்குடியில் கண்டதாகவும் 18ம் நூற்ருண்டில் கத்தோலிக்க குரு ஒருவர் எழுதிவைத்திருக்கின்ருர். அவற்றையெல்லாம் நான் கண்டுபிடிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

சிலவேளைகளில் பல ஆயிரம் வெள்ளி செலவுசெய்து ஐரோப்பாவுக்குச் சென்று ஒரு தமிழ் நூலையேனும் காணும்போது செலவான தொகை நற்பயனையே அளித்தது என்று நம்புகிறேன்.

16ம், 17ம், 18ம் நூற்ருண்டுகளில் அச்சேறிய நூல்களையெல்லாம் கண்டுபிடித்து அவற்றைப்பற்றி ஒரு நூல் எழுத வேண்டும் என்று கருதுகின்றேன். இத்தகைய ஆராய்ச்சி ஆக்க இன்பத்திலும், ஆராய்ச்சி இன்பத்திலும் அடங்கும்.

தாய்லாந்திற்குச் சென்றபோது, அங்குள்ள வேதியர் தாய்மன்னரின் முடிசூட்டுவிழாவில் இந்தியமொழிப் பாடல்களைப் பாடுகின்றனர் என்று அறிந்திருந்தேன்.

ஆயினும் முதன் முதலிற் சென்று அவர்கள் ஓதும் செய்யுட்கள் திருப்பாவை, திருவெம்பாவையிலுள்ள முதற் செய்யுட்கள் என்று கண்டுபிடிக்கும் இன்பத்தை நான் பெற்றேன்.

### ஆராய்ச்சி இன்பம்

புதுப் பொருள்களைப் புதிதாகக் கண்டு பிடிப்பது ஆராய்ச்சி இன்பந்தான். ஆனல் உள்ள நூல்களுக்குப் புதிக் கருத்துக்களையும், புது முறைகளில் அவற்றை விளக்குவதும் அவ்வாராய்ச்சி இன்பத்திலடங்கும்.

எனவே இலக்கியப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது மாணவர் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் உண்டாக்குவதுதான் ஆசிரியரின் இன்பம்; அதனை நானும்பெற்று வருகின்றேன்.

வள்ளுவர் கூறினர், தாமின் புறுவது உலகின்புறக் கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்—என்று.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று திருமூலரும் கூறினர்.

இறுதியாக, இறை வழிபாடு ஆக்கப் பண்பையுமூக்கும் பெரும் ஊற்று என்று குறிப்பிடுவேன். மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்ருல் இவ்வுலகைக் கடந்த பரம்பொருள் ஒன்றின் உண்மையை உணர வேண்டும். அடிகளார் கண்ட இறையின்பத்தைப் புதிதாகக் காண்பதிலும் உணர்வதிலும் பெரும் ஆக்கப் பண்பும், ஆராய்ச்சி இன்பமும் உண்டு என்பதை இறை வழிபாடு செய்பவர் நன்கு உணர்வர்.

கேள்வி:- தாங்கள் பல மொழிகள் கற்றவராக இருந்தும் தமிழ் மீது பற்றுதல் கொண்டு ஆராய்ச்சி நடத்த எப்போது முடிவு செய்தீர்கள்?

பதில்:- தாய்மொழி தமிழ் தான் என்ருலும் ஆரம்பத்தில் ஆங்கிலமும், தமிழும், லத்தீனுந்தான் கற்றேன். மேல் நாட்டுக்குச் சென்று கல்வி கற்றபோது அந்த மொழிகளில் இருந்த இலக்கிய வளம் என்னைப் பெரிதும் கவர்ந்ததால் தமிழ்மொழியை நன்கு ஆய்ந்து அதன் இலக்கிய வளங்களைக் கண்டறிய வேண்டுமென விரும்பினேன். நாடு திரும்பியதும் தமிழை விரிவாகப் பயில ஆரம்பித்தேன்.

### பெரும் பயன்

கேள்வி:- தாங்கள் வெளி நாடுகளுக்குத் தமிழ்த் தூது சென்றீர்களே அத்தகைய பிரயாணம் தங்களது தமிழ் ஆராய்ச்சித் துறைக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமைந்ததா?

பதில்:- பெரும்பயன் தந்தது. இது குறித்து நான் 'தமிழ்த் தூது' என்ற எனது சிறு நூலில் கூறியுள்ளேன். மேலும் எனது பயணத்தால் ஏற்பட்ட அறிவையும் (அனுபவம்) பயனையும் விளக்கும் ஆராய்ச்சி நூல் ஒன்றையும் புதிதாக யாத்து வருகிறேன். உலகச் செலவின் அனுபவங்கள் குறித்து நான் எழுதி வரும் நூலில் இன்னும் ஓர் அதிகாரந்தான் எழுதப்பட வேண்டும்.

கேள்வி:- புதிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குத் திட்டங்கள் ஏதும் வகுத்துள்ளீர்களா?

பதில்: ஆம். அத்துறையில் ஈடுபட அதிகம் நாட்டம் கொண்டு, பல வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மலாயாவைச் சூழ்ந்துள்ள பகுதிகளின் தமிழ்ப் பண்பாட்டு முறையை ஆராய்வது இத்துறையின் நோக்கமாகும். மேலும், பல்கலைக் கழகத்தில் பணியாற்ற ஈழத்திலிருந்து ஆராய்ச்சி வல்லுனர் டாக்டர் சி. அரசரத்தினமும், இங்கிலாந்தில் இருந்து வடமொழி உட்பட பண்டைய மொழிகளை நன்குகற்ற திரு கிலிங்லியும் வரவிருக்கின்றனர். இவர்களது வருகையால் ஆராய்ச்சிப் பணியைப் பாங்குற மேற்கொள்ள இயலும் என்பது என் கருத்து. மேலும் புதுத்துறைகளில் ஆராய்ச்சியை ஆரம்பிக்க வாய்ப்புக் கிடடும்.

### ஆங்கிலத்தில் சிலம்பு

கேள்வி: தமிழ்மீது இத்துணையளவு பற்றுதல்கொண்டு தமிழன்னைக்குத் தொண்டு செய்யும் தாங்கள் தங்களது ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக பதிய நூல்கள் ஏதும் எழுத உத்தேசித்துள்ளீர்களா?

பதில்: சென்ற நூற்ருண்டுகளில் வெளிவந்த அகர வரிசைகள் பற்றியும், 16, 17, 18 ஆம் நூற்ருண்டுகளில் அச்சேறிய தமிழ் நூல்களைப்பற்றியும் ஆராய்ந்து நூலாக வடிக்கத் தீர்மானித்துள்ளேன். மேலும் திருக்குறளும், மேல்நாட்டு அறஇயலும் பற்றியும் நூல் எழுதத் திட்டமிட்டுள்ளேன். 20 ஆம் நூற்ருண்டின் தமிழிலக்கியம் பற்றி ஆங்கிலத்தில் பல அதிகாரங்கள எழுதி வைத்திருக்கின்றேன். சிலப்பதிகாரத்தைப்பற்றியும் ஆங்கிலத்தில் ஒருநூல் எழுதவிரும்புகிறேன்.

தமிழ்மொழி மீது வற்ருத மோகங்கொண்டு, அதனை மேலும் மேலும் ஆராய்ந்து பழமையில் புதுமைகாணத் துடிக்கும் தவத்திரு தனிநாயக அடிகளார் என்னைப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச்சென்று அங்கு நடைபெறும் ஆராய்ச்சிப் பணிகளின் ஒரு பகுதியை ஆதாரத்துடன் விளக்கினர்.

'வத்திக்கான் நூற்கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்-போர்த்துக்கீஸ்' அகர வரிசை நூலின் 300 பக்கங்களை குறு நிழற் படமாக (மைக்ரோபிலிம்) தயாரித்து அச்சிடப்பட்டிருப்பதைக் காட்டினர்.

மேலும், வத்திக்கானில் கை எழுத்துப்பிரதியாக இருக்கும் 'பள்ளிப் பிள்ளையார் சிந்து' என்ற நூலை குறுநிழற்படமாகத் தயாரித்துள்ளதையும் அடிகளார் காண்பித்தார்.

'பாரிஸில் உள்ள ஒரு நூல் நிலையத்தில் பலஅகராதிகளும், கையெழுத்துப்பிரதிகளும் உள்ளன. அவற்றையும் நிழற்படமாகத் தயாரித்துவர ஏற்பாடு செய்வேன் என்று அடிகளார் அறிவித்தார்.

## காங்கோவில் அம்மை நோய்

பிரஸ்ஸல்ஸ், செப். 21

காங்கோவின் தலைநகரான லியப்போட்வில்லியில் அம்மை நோய் கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றும், மற்ருெரு காமன் வெல்த் நாட்டுக்கு அதுபற்றிப் பேச உரிமையில்லை என்றும், சாட்டை கொடுத்துள்ளதுடன் "லண்டன் நகர சுதந்திரம்" என்ற கௌரவம் பெற்ற நேருவைத்திருத்தி அடக்குவது லண்டன் மேயரான தங்களுடைய கடமை என்றும் கூறுகிறீர்கள். நேருவை அடக்க நீங்கள் ஒருவராவது கிடைத்தது பற்றி மகிழ்ச்சி. இனிமேல் இப்படிப்பட்டவர்களுக்கு அந்தக் கௌரவத்தை அளிக்காதீர்கள்.

நானுக இருந்தால் அந்த "சுதந்திரத்தை" தலையை மூன்று முறை சுற்றி லண்டனிலுள்ள தங்களிடம் வீசி எறிந்துவிடுவேன். ஆனல் நேரு அவ்வளவு மரியாதை தெரிந்தவரல்லவே!

இப்படிக்கு,
ஜயாறன்.

குறிப்பு:-

எனக்கு ஒரு சந்தேகம். நான் லண்டன்வந்திருக்கையில் ஹிட்லரின் குண்டினுல் அங்கு ஏற்பட்டிருந்த நாசங்களை நேரில் கண்டேன். அணுகுண்டு விழுந்தால் லண்டன் மட்டுமல்ல, காற்றில் விஷம் பரவி, இலங்கையிலுள்ள எங்களுக்கும் தீங்கு ஏற்படுமல்லவா? அப்படியானுல் இது தங்கள் உள்நாட்டு விஷயமாகுமா? எங்கள் பக்கம் விஷம் பரவாமல் உங்கள் நகருக்குள்ளாகவே அதை அடக்கி வைக்க ஏதாவது ஏற்பாடு செய்வீர்களா?

'ஜயன்ன'.

## கைப்பந்தாட்டப் போட்டிகள்

அச்சுவேலி, வெள்ளி

ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலைய அமைப்பின் கீழ் இரண்டு கைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன. விறுவிறுப்புடன் சிறப்பாக நடைபெற்ற இப்போட்டிகளை பலர் கண்டுகளித்தனர்.

அரியாலை ஸ்ரீ கலைமகள் கோஷ்டுக்கும், வடமராட்சிக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் அரியாலைக் கோஷ்டி 15—7, 15—11 புள்ளிகளால் வடமராட்சிக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. வி. மகேஸ்வரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இப்போட்டியைத் தொடர்ந்து அச்சுவேலி தெரிவுக் கோஷ்டிக்கும் வதிரி பொம்போஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் 15—13, 9—15, 15-10 புள்ளிகளால் வதிரி பொம்போஸ் கோஷ்டி வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு திரு. வி. தர்மலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இவ்விரு போட்டிகளும் சர்வோதய சனசமூக நிலையக் கட்டிட நிதிக்காக நடைபெற்றன.

## இரத்தினக் கம்பளம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யாலங்கார தரும வித்தியாலய அதிபர் பெரிதும் பயப்படுகின்ருர். கருத்தடையை ஆதரிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இருப்பதை அவர் சஞ்சலத்துடன் எடுத்துக்காட்டி அதனை அரசாங்கம் மேற்கொள்ளுமானுல் நாட்டின் அபிவிருத்திக்கு ஆபத்துத் தேடுவதாகும் என அவர் எச்சரிக்கை செய்துள்ளார். நாட்டின் செல்வ வளத்தைக் கருத்தடை பாதிக்குமென்பது அந்த அதிபரின் கருத்து. இந்திய அரசினரும் கருத்தடையில் அக்கறை காட்டி வருகின்றனர். அங்கும் இதற்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. சென்னையிலிருந்து வெளியாகி வரும் தமிழ்த் தினசரி ஒன்று கருத்தடையை எதிர்த்துப் 'போர்' தொடுத்திருப்பதுடன் அதிகமான பிள்ளைகளைப் பெறும் குடும்பத்தினருக்குப் பரிசுகள் அளித்து அவர்களின் படங்களையும் முதற் பக்கத்தில் பிரசுரித்து வருகின்றது.

கருத்தடையைக் கண்டிக்கும் வித்தியாலங்கார அதிபர் இலங்கை மக்கள் காட்டுமிராண்டிகளாகிவிடக் கூடாதெனவும் பிரார்த்திக்கின்ருர்.

∴ ∴ ∴

### மேயர் சவால்

மேற்கு ஜெர்மனியில் ஓரிடத்தில் சர்க்கஸ் நடைபெற்றபோது அந்த நகர மேயரும் காட்சிக்குச் சென்றிருந்தார். சிங்கங்கள் உள்ள கூட்டில் சதுரங்கம் ஆடவரும்படி சர்க்கஸ் முதலாளி மேயரை அழைத்தார்.

மேயர் இச்சவாலை ஏற்று நான்கு சிங்கங்கள் உள்ள கூண்டுக்குள்ளே சென்று முதலாளியுடன் சதுரங்கம் ஆடி அவரைத் தோற்கடித்தார்.

"சிங்கங்கள் இருந்த கூண்டுக்குள் நீங்கள் இருந்தபோது எப்படி இருந்தது?" என அவர் நண்பர்கள் மேயரைக் கேட்டனர்.

"அதுவா! நகரசபைக் கூட்டத்தில் இருப்பது போல்த் தோன்றியது. ஆனல் சிங்கங்களிடையே இருந்தபோது நகரசபைக் கூட்டத்தில் இருப்பதைவிட மிகப் பாதுகாப்பான இடத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றியது" என அவர் நண்பர்களைப் பார்த்துச் சொன்னர்.

∴ ∴ ∴

### பேராசிரியர் இராமநாதபிள்ளை

தமிழ்ப் பண்பாளர் பேராசிரியர் த. இராமநாதபிள்ளை கல்லூரி அதிபராகப் பணியாற்றி இப்போது இளைப்பாறியிருக்கின்ருர். புலோலி ஆங்கிலப் பாடசாலையில் சமீபத்தில் அவருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பேராசிரியரின் ஆற்றலையும் தமிழ்ப் புலமையையும் பேராசிரியர்கள் உட்படப் பலர் பாராட்டினர். 'யவனி மஞ்சரி' மூலம் தமிழ் உலகில் தமக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள பேராசிரியர் இராமநாதபிள்ளை முத்தமிழ்வித்தகர் விபுலானந்த அடிகளாரின் நன்மதிப்பையும் பெற்றவர். இவருடைய ஆற்றலைத் தமிழ் மக்கள் பயன் படுத்த வேண்டும்.

'ஓய்வுநாள் உமது கல்லூரிப்
பணிக்காம்;
ஓய் தமிழ்ப் பணியினுக்
கன்றே

என புதுச்சேரி இலக்கியத் திங்கள் இதழ் 'கலைச் செல்வி' இந்த ஈழத்துத் தமிழ் அறிஞரை வாழ்த்துகின்ருள்.

# சுழிபுரம் கொலை வழக்கு

## சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

மாவிட்டபுரம், வெள்ளி

சுழிபுரத்தைச் சேர்ந்த வேலன் பழனி என்பவரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி அவரது மனைவியான பழனி சின்னத்தங்கம் மீது சங்கானை பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையிற் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சங்கானை பொலிஸ் அதிகாரி திரு. கே. குமாரின் சாட்சியத்தைப் பதிவு செய்தபின் நீதிபதி வழக்கை யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினர்.

திரு. கே. குமார் சாட்சிய மளிக்கையில் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று தாம் எடுத்த நடவடிக்கைகளை விவரித்தார்.

கொலையுண்டவர் பலதடவைகள் சிறை சென்றுள்ளார் என்றும் திரு. கே. குமார் தமது சாட்சியத்தில் கூறினர்.

திரு. டி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை எதிரி தரப்பில் ஆஜரானர்.

சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. குமார் வழக்கை நடத்தினர்.

## இடைத் தேர்தலில் இருவர் போட்டி

யாழ்ப்பாணம், சனி

பூனகரி கிராமச்சபையின் 6-ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை திரு. தம்பு அப்பையா, திரு. பரமநாதன் வேலுப்பிள்ளை ஆகிய இருவரும் சமர்ப்பித்திருக்கின்றனர்.

தேர்தலுக்கான திகதி இன்னும் குறிப்பிடவில்லையெனத் தெரிகிறது.

## ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள்

முதலாவது பரிசு:
08 W 0611 — ரூ. 64,700

இரண்டாவது பரிசு:
21 Q 0171 — ரூ. 32,250

மூன்ருவது பரிசு:
12 D 0691 — ரூ. 16,175

பரிசு ஒன்றுக்கு ரூபாய் 647 பெறும் ஏனைய 25 பரிசுகள்.

| | |
|---|---|
| 03 C 0169 | 12 Z 0755 |
| 06 O 0796 | 03 S 0425 |
| 19 B 0764 | 06 Y 0929 |
| 06 U 0793 | 01 Y 0190 |
| 03 Z 0770 | 09 O 0567 |
| 08 M 0088 | 12 Y 0389 |
| 04 M 0583 | 07 M 0470 |
| 06 N 0717 | 08 Y 0245 |
| 11 N 0434 | 19 A 0062 |
| 16 G 0008 | 01 J 0817 |
| 09 Z 0271 | 09 G 0521 |
| 04 L 0437 | 12 D 0320 |
| 01 F 0016 | |



# மாணவர் மலர்



## அறிவுச் செல்வம்

★ உங்களைப் பார்த்து, 'இப்போது மணி என்ன இருக்கும்...?' என்று கேட்டால் உடனே நீங்கள், கையிலிருக்கும் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு சரியான நேரத்தையும் கூறிவிடுவீர்கள். ஆனல் கண்ணிழந்த குருடர் ஒருவரிடம் இக் கேள்வியைக் கேட்டால்...? குருடர்களும் சரியான நேரத்தைச் சொல்லும் வகையில், பிரிட்டன், குருடர்களுக்காகவே புது வகைக் கடிகாரங்களைச் செய்துள்ளது. இக்கடிகாரங்களின் முகப்பில் புள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. குருடர்கள் பயன் படுத்தத்தக்க கடிகாரங்களைச் செய்து இந்தியா உட்பட அனைத்துலக நாடுகளுக்கும் அனுப்பி, பிரிட்டன் சிறந்த சாதனையை நிலை நாட்டியுள்ளது. புள்ளிகளைத் தடவிப் பார்த்தே.'என்ன மணி' என்று குருடர் தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இக் கடிகாரங்கள் உறுதி வாய்ந்தன.

★ புது வகைத் தாவரங்களை உண்டாக்க அணுக் கதிர் பயன் படுகிறது. அணுக் கதிர் ஊட்டப்பட்ட மகரந்தத் தூள்களால், ஒரே இனத்தைச் சேர்ந்த வெவ்வேறு தாவரங்களை இணைக்க முடியுமாம். இந்தப் புதிய முயற்சியினல் நல்ல புதுத்தானியவிதைகளையும், பழவகைகளையும் உண்டாக்கலாம்.

★ இப்பொழுது ஓடுகின்ற கார் டீசல், பெட்ரோல் இவைகளினல்தானே ஓடுகிறது? இனி வரப்போகும் கார்கள் மின்சாரத்தினல் ஓடும் மின்சாரத்தினல் ஓடக்கூடிய மோட்டார்களுக்கு 'டெல்'என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த மோட்டார் காரைச் செய்த பெருமை திரு. எப். எல். ஆர். பிரௌன்னைச்சாரும்.

★ மண் வளப் பாதுகாப்பு வேலையாக லபாயெட் என்ற இடத்தில் அண்மையில் குழி வெட்டிக் கொண்டிருந்தவர்கள் பனியுகத்தைச் சேர்ந்த யானை ஒன்றின் எலும்புக் கூட்டைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். இதன் எலும்புகள் யாவும் சேர்ந்து 400 ருத்தலுக்கு மேல் இருக்கின்றன. இவை, 8,000 ஆண்டுகளுக்கு முன் வட அமெரிக்கக் காடுகளில் திரிந்த ஒரு யானையின் எலும்புகளாக இருக்கலாமென்று புர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் டபிள்யூ. என். மெல்ஆர்ன் என்பவர் கருதுகிருர்.

★ மிகவும் சக்தி வாய்ந்த பிசின் வகைகள் இப்போது தயாரிக்கப்பட்டுள்ளன. சதுர அங்குலத்துக்கு 7,000 ருத்தல்வரை அதிகமான அழுத்தத்தைக் கொடுத்து இழுத்தாலும், இப் பிசின்களால் ஒட்டப்பட்டுள்ள பொருள்களைப் பிரிக்கவே முடியாது. இத்தகைய பிசினல் (ஒரு துளி) ஒட்டப்பட்ட இரும்புத் தண்டிலிருந்து ஒரு மோட்டார் கார் நான்கு பிரயாணிகளுடன் கீழே விழாமல் தாங்கப்படும் விந்தை அண்மையில் பரீட்சிக்கப்பட்டது.

## 'பிரமிட்ஸ்'

உலக அதிசயங்களில் எகிப்து தேசத்திலுள்ள 'பிரமிட்ஸ்' எனும் கூர்நுதிக் கோபுரங்கள் முக்கியத்துவம் வாய்ந்தன. இப் பிரமாண்டமான கட்டடங்கள் ஏன் கட்டப்பட்டன என்பது பற்றிச் சிலருக்கு மட்டும்தான் தெரியும்.

5000 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட பிரமிட்ஸ் பிரமாண்ட கட்டடங்கள், கணக்கிட முடியாத கற்களைக் கொண்டு கட்டப்பட்டவை.பிரான்ஸ் தேசத்தைச் சுற்றி 10 அடி உயரத்தில் ஒரு சுவர் அமைக்கப் போதுமான கற்கள் பிரமிட்ஸ் கட்டடத்தில் உபயோகமாகியுள்ளதாம். 5000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை எனினும் கட்டடப் பிரமாண நுட்பங்களுடன் இவை அமைந்துள்ளன. 500 அடி உயரமும் 750 அடி அகலமும் அளவு கொண்ட பிரமிட்ஸ் கட்டு வேலைகளில் உருளையையும் கப்பியையும்விட, வேறு எந்த யந்திர சாதனமும் உபயோகிக்கப்படவில்லை. எனவே பெரிய 'பிரமிட்' உட்பட பிரமிட்களைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு மனித உழைப்பு செலவாகியிருக்கும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாமல்லவா?

ஒவ்வொரு 'பிரமிட்'டும் ஒவ்வொரு மனித சடலத்துக்காகக் கட்டப்பட்ட சமாதியாகும். எகிப்திய மக்கள் எகிப்து அரசர்கள் இறந்த பிற்பாடு அவர்களின் சடலங்களையும் அவர்களுடைய பொருள்களையும் திருடர்களிடமிருந்து காப்பாற்ற நினைத்தார்கள். இறந்த அரசரின் ஆத்மாவைக் காப்பாற்றுவதற்கு இதுவே வழி என்று பழைய எகிப்திய மக்கள் நம்பினர்கள். எனவே தான் ஒவ்வொரு அரசனது சடலத்தையும் அவனது பெறுமதி வாய்ந்த பொருள்களையும் வைத்து பிரமாண்டமான சமாதிகளைக் கட்டினர்கள்.

அவற்றைப் பாதுகாப்பதற்குப் பிரமிட் வடிவத்தில் பிரமாண்டமான கட்டடங்களை ஏன் கட்ட வேண்டும்? எகிப்திய மன்னர் சூரியனை வழிபட்டார்களாம். சூரிய கிரணங்கள் முகில்களுக்கூடாகத் தெரியும்போது பிரமிட் உருவமாகத் தோற்றுவதால் அந்த உருவத்தில் கட்டினர்கள் என்று காரணம் கூறப்படுகிறது.

## மாணவரிடையே உடல்நலக் குறைவு

சுகாதாரப் பகுதி வைத்திய அதிகாரிகள், அண்மையில் அகில இலங்கைப் பள்ளிக்கூட மாணவர்களை வைத்திய பரிசீலனை செய்ததன் பேரில் இலங்கையிலுள்ள பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளில் 100 க்கு 50 வீதம் உடல் நலமற்றவர்கள் என்னும் முடிவுக்கு வந்துள்ளார்கள்.

3,985 பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் வைத்திய பரிசீலனைசெய்யப்பட்டார்கள். 5-14 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளில் 196,003 பிள்ளைகள் உடல்நலக் குறைவுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இவர்கள் யாவருக்கும் வைத்திய பரிசீலனையும் செய்யப்பட்டது. 59.3 வீதம் பிள்ளைகள் சாதாரண தேகசுகம் அற்றவர்கள் என முடிவு செய்யப்பட்டது. அத்தோடு இவர்களிடம் ஆளுக்கு ஒரு சரீர குறைபாடேனும் இருக்கக் காணப்பட்டது. உணவுக் குறைவு, குடல் வியாதி, இரத்தக் குறைவு, பல்வியாதி ஆகியவை மாணவரிடையே பரந்து காணப்படும் சிலஉடல் நலக்குறைகள் என சுகாதாரப் பகுதியினர் ஆராய்ச்சி கூறுகிறது.

## 3,200 வகை மிளகு

கிழக்கு நாடுகளுக்குத் தரை மார்க்கமும் கடல் மார்க்கமும் கண்டுபிடிக்க உதவிய வாசனைத் திரவியமாகிய மிளகு, உலக மக்கள் அனைவராலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. ஒரு காலத்தில் இது நாணய செலாவணியாகவும் உபயோகிக்கப் பட்டதென்பதால் பழைய காலத்தில் இதற்கு இருந்த பெருமதிப்பு நன்கு புலனுகிறதல்லவா?

பிரிட்டிஷ், ஒல்லாந்து தேசத்தினர், போத்துக்கேயர், ஸ்பானியர் ஆகியோரும் கிழக்கு நாடுகளுக்குத் தரைமார்க்கமும் கடல்மார்க்கமும் கண்டு பிடித்ததற்கு கிழக்கு நாடுகளில் விளைந்த மிளகு முக்கிய காரணமாகும்.


வெனிஸ் மக்களும் மிளகில் அதிக விருப்புடையவர்கள். ஒரு காலத்தில் மிளகின் சொந்துரிமை முழுவதும் இவர்களுக்கு இருந்ததென்றும் இதன் காரணமாகவே இவர்களால் கிழக்கு நாடுகளுக்கு மார்க்கம் கண்டுபிடிக்கும் முயற்சிகள் ஆரம்பமாகிய தென்றும் சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுகிருர்கள்.

இந்தியாவிலேயே முதல் முதலாக மிளகு உண்டாக்கியது எனக் கொள்ளப்படுகிறது. ஆனல் சிலர் மொலூக்காவிலும் கிழக்கு இந்தோனேஷியாவிலும் அது காணப்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனல் இன்றும் இந்தியாவிலேயே பெருந் தொகையாக மிளகு உற்பத்தியாகிறது.

மிளகில் 3,200 வகை உள்ளன எனத் தாவரநூல் ஆராய்ச்சி வல்லுனர் கூறுகின்றனர். இவ்வகைகளுள் பெரும்பாலானவை இந்தியாவில் காணப்படுகின்றனவாம். இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய இடங்களிலும் மிளகு அதிகம் உண்டாக்கப்படுகிறது.

போர்ணியோவிலுள்ள சரவக்கா என்னுமிடத்தில் மிளகுச் செய்கை அதிகம் நடைபெற்று வருவதால் சரவக்காவை 'மிளகுத் தலைப்பட்டினம்' என அழைப்பர்.

மிளகுக் கொடி சில சமயங்களில் 30 அடி உயரத்துக்கும் படர்ந்து வளரும்.



வானவெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் செயற்கைக் கிரகங்களை வானவெளிக்கு அனுப்பி பரிசீலனைசெய்துவரும் அமெரிக்கா, சமீபத்தில் வானவெளிக்கு அனுப்பிய எக்ஸ்புளோரர் 12 என்ற செயற்கைக் கிரகம் இது.

## மின் விளக்கு

— ந. செல்லப்பன் —

விளக்கு நல்ல விளக்கிதுவாம்
விந்தை மிக்க விளக்கிதுவாம்
பழக்க மாக எப்போதும்
பயனைச் செய்யும் விளக்கிதுவாம்
இரவைப் பகலாய் மாற்றிடுமே
எங்கும் ஒளியைப் பரப்பிடுமே
அரசின் தலைவர் வந்திடிலோ
ஆயிரம் வகையில் மின்னிடுமே.

அண்ணு விற்குத் தேர்வென்றுல்
அபரா தென்றும் எரிந்திடுமே
கண்ணல் கூர்ந்து பார்த்தாலே
கண்ணைக் கூசச் செய்திடுமே
பொத்தான் ஒன்றை அழுத்திவிடில்
பொட்டென் றுடனே எரிந்திடுமே
மெத்தச் செலவு இல்லாமல்
வேண்டும் ஒளியை தந்திடுமே.

ஓடும் நீரின் சக்தியினல்
உருளும் பெரிய சக்கரங்கள்
கூடும் விசையைப் பெருக்கிடுதே
குறையா நலத்தைத் தந்திடுதே
அந்த விசையே மின்விசையாம்
அற்புதமான நல் விசையாம்
எந்த நாளும் அவ்விசையால்
எரியும் வீட்டில் மின்விளக்கு

## கசரோக தடுப்பு இயக்கம்

உடுப்பிட்டி, வெள்ளி வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி. சில்வா சமீபத்தல் மகாண வித்தியாதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் இலங்கைக் கசரோகத் தடுப்புச் சங்கம் ஆரம்பிக்கவிருக்கும் இயக்கத்துக்குப் பூரண ஒத்துழைப்பை நல்குமாறும், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் மூலம் பெற்ருேருக்கும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்துமாறும் கேட்டுள்ளார்.


# குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார்
மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.

# தொழிலாளர் சங்க நிர்வாகிகள் தேர்தல்

## சிலர் வெளியேற்றம்

மாவிட்டபுரம், வியாழன் காங்கேசன் சிமெந்து உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் புதன்கிழமை மாலை நடைபெற்றபோது தலைவர் தெரிவில் ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் கடைசி நிகழ்ச்சியாக உத்தியோகத்தர் தெரிவு நடைபெற வேண்டியிருந்ததால் அவ்வேளையிற் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பதற்கு ஒரு தேர்தல் அதிகாரியைத் தெரிவு செய்வதுபற்றிய பிரச்சினை கூட்டத்தில் எழுப்பப்பட்டது. இச்சமயம் காங்கேசன் சிமெந்துத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றி வந்த திரு. எஸ். ஐ. விஜயநாயகம் திரு. கே. செல்வராசாவை நியமித்தார். ஆனால் சபை இதனை ஆட்சேபிக்கவே தேர்தல் அதிகாரியைத் தெரிவுசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க திரு. வி. கந்தையா தேர்தல்அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னர் தேர்தல் ஆரம்பமாகியது. தலைவர் பதவிக்கு திருவாளர்கள்: எஸ். ஐ. விஜயநாயகம், ஆர். அழகரத்தினம், இ. கதிரவேலு ஆகிய மூவரின் பெயர்கள் முறையே பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டன. வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது திரு. எஸ் ஐ. விஜயநாயகம் தலைவராக முதலாவது வாக்கெடுப்பின் போது தெரிவு செய்யப்பட்டார். திரு. ஆர். அழகரத்தினத்தின் ஆதரவாளர்களின் வேண்டுகோளின்படி இரண்டாவது முறையாக வாக்கெடுப்பு நடைபெற்றது. இதனை ஆட்சேபித்து முதலாவது வாக்கெடுப்பில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். ஐ. விஜயநாயகம் தனது ஆதரவாளர்களுடன் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

இதன்பின்பு மிகுதியாக இருந்த அங்கத்தவர்களுடன் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. ஆர். அழகரத்தினம், உபதலைவர்:- திரு. ப. கந்தையா, காரியதரிசி திரு. வி. கே. வயித்திலிங்கம், உபகாரியதரிசி: திரு. கே. வயித்திலிங்கம், தனதிகாரி: திரு. என். வீரசிங்கம்.




## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 23-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சிறிதேவி பத்மநாதன் - வயலின்.

இரவு 7-15 நேயர்கடிதம், 7-30 எஸ். பாலசிங்கம்-பாட்டு 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 அறிவுச்சுழல், 9-45 லயவின்யாசம், 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 24-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 சாலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 தேர்ந்தஇசை, 8-30 ஞான அஞ்சலி, 9-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 எம். எஸ். தங்கவேல் - பாட்டு, 5-45 திரைக்குரல், 6-15 கோவிலஞ்சல்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 பாலம் இலட்சுமணன் - பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 'ஒரு மின்னல்' - நாடகம், 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

**சனி 23-9-61**

காலை 6-45 மங்களஇசை. 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் பாடுபவர்: எம். எஸ். சுப்பலட்சுமி.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 கோயமுத்தூர் பி. ஆர். ராமச்சந்திரராவ் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'புயலில் ஒரு மலர்' - நாடகம், 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு 24-9-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 இசைக் கோவை, 8-15 என். ரமணி புல்லாங்குழல்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சுலோசன மகாதேவன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'நீதிகௌள' - ராகமஞ்சரித் தொடர் இரண்டாவது நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.

---

## அகில உலக குழந்தைகள் வாரம்

கொழும்பு, வியாழன் அக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஏழாம் திகதி வரை, அகில உலக குழந்தைகள் வாரம் கொண்டாடப்பெறும். இவ்வாரத்தில் கொழும்பு கனிஷ்ட வர்த்தக சம்மேளனம் ஓர் சர்வதேச கதம்ப நிகழ்ச்சியை நடாத்தவிருக்கிறது.

# அவசரகாலத்தை நீக்க கோரும் பிரேரணை

## புதன்கிழமை பார்லிமெண்டில்விவாதம்

### இதர எதிர்க்கட்சிகளும் பிரேரணைக்கு ஆதரவு

கொழும்பு, வெள்ளி

**அவசரகாலச் சட்டத்தை நீக்கக் கோரும் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரேரணை மீது அடுத்த புதன்கிழமை ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதம் நடைபெறும்.**

ஜனப்பிரதிநிதிகள் சபை, இன்று காலை உபசபாநாயகர் திரு. ஹியூபெர்னன்டோ தலைமையில் கூடியது.

நிகழ்ச்சி நிரலில் எண்பதாவதாக உள்ள விஷயம் எப்பொழுது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று காலி எம். பி. திரு. டபிள்யூ. தகநாயக்கா கேட்டார்.

அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோரி லங்கா சமசமாஜக் கட்சியினர் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணைதான் நிகழ்ச்சி நிரலில் எண்பதாவது விஷயமாக இடம் பெற்றுள்ளது.

இதர விஷயங்களுடன் அவசரகாலச் சட்டத்தை நீக்கக் கோரும் பிரேரணை பற்றியும் விவாதிக்க மாலையில் உதவி சபாநாயகரை எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பதற்கு சபையின் அனுமதியைக் கோரியிருப்பதாக சபைமுதல்வர் திரு. சி. பி. டி' சில்வா கூறினர்.

**உபசபாநாயகர்**—எதிர்க் கட்சித் தலைவர் கொழும்பில் இல்லை; வெளியூர் சென்றிருக்கிருர். விவாதத்தை புதன் கிழமை வைத்துக் கொள்ளலாமா?

**டி' சில்வா:**-எனக்கு ஆட்சேபமில்லை.

இதன் பின் அவசரகாலச் சட்டத்தை நீக்கக் கோரும் பிரேரணையின் மீதான விவாதத்தை புதன் கிழமை வைத்துக் கொள்ளலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அவசரகால நிலைமையை ரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரி ஜனப்பிரதிநிதிகள்சபையில் லங்கா சமசமாஜக் கட்சி கொண்டுவரவிருக்கும் பிரேரணையை யு. என். பி, எம். ஈ. பி., கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா பிரஜா தந்திரக்கட்சி ஆகியவைகளும் ஆதரிக்குமென அறியப்படுகிறது.

## உருத்திரபுரத்தில் காந்தீய சேவா சங்க மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை காந்திய சேவாசங்கத்தின் 12-வது வருடாந்த மகாநாடு 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது. உருத்திரபுரம் காந்திநிலைய விடுதி மண்டபத்தில் திரு. கே. நேசையா தலைமையில் மகாநாடு நடைபெறும். மாலையில் பகிரங்கக் கூட்டமும் நடைபெறும்.

பார்லிமெண்டில்

## நீடித்த கூட்டங்கள் மேலதிகச் செலவு

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்டில் கடந்த சில மாதங்களாக கூட்டங்கள் நீடித்து நடாத்தப்பட்டமையால், நீடித்த கூட்டங்களால் ஏற்பட்ட செலவுகளுக்குப் பிரத்தியேக பணம் ஒதுக்கும்படி அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலைமை நிதி மந்திரிக்கு ஏற்பட்டுள்ளது. மேலதிக நேர வேலைக்கும் மேலதிகமாகச் செலவாகிய மின்சாரத்துக்கும் பணம் ஒதுக்கப்பட வேண்டிருக்கின்றது. அரசகரும மொழி அமுலினல் அதிகமான உழைப்பும் குளிரூட்டும் சாதன கண்டிஷன் வசதிகளும் நிறுவப்பட்டதால் அதிக மின்சாரமும் செலவாகியுள்ளன.

அதிகமாகியுள்ள செலவுக்கென 48,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்புச் சபைக் கூட்டம்

நியூயோர்க், செப். 22

ஐ. நா. பாதுகாப்புச் சபை அடுத்த செவ்வாய்க்கிழமை கூடுகிறது. ஐ. நா. வில் வெளி மங்கோலியாவுக்கும் சியாஹாலியோவுக்கும் அங்கத்துவமளிக்கும் விஷயம்பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

## 2-வது தடவையும் நியமனப் பத்திரம் இல்லை!

யாழ்ப்பாணம், சனி

முள்ளிப்பற்றுக் கிராம சபையின் 8-ம் வட்டாரத்துக்கான அங்கத்தவர் ஸ்தானம் நியமனப்பிரதிநிதித்துவமூலம்நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இந்த வட்டாரத்து இடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இரண்டாவது தடவையாகக் கோரப்பட்டிருந்த போதும் எவரும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ய முன்வரவில்லை.

இவ்வாறே முன்னரும் ஒரு முறை நடைபெற்றிருக்கிறது.

## பள்ளிக்கூடக் கூரை சரிந்து விழுந்தது

### பெருமழையால் சேதம்

அத்தனகல, வெள்ளி

எதிர்பாராத பெருமழையினல் அத்தனகலயிலுள்ள கமக்காரர்கள் பெரு நஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிருர்கள். வயல்கள்நிரம்பத்தண்ணீர் நிற்பதால் விதைப்பு நடைபெற முடியாதிருக்கிறது. ஏற்கனவே விதைக்கப்பெற்ற சில வயல்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவிட்டன.

கடும் வரட்சிக்குப் பிறகு பதுளையிலும் இப்போது பலத்த மழை பெய்கிறது. சமீபத்தில் வீசிய புயற்காற்று பதுளை சுஜாதா பெண்கள் பாடசாலைக் கூரையை அள்ளிவிட்டது. காய்கறிச் செய்கையும் நெல்வயல்களும் மழையினல் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

## சீனவுக்கு அங்கத்துவம்

### ஐ. நா. பொதுச்சபை விவாதிக்கும்

நியூயோர்க், செப். 22

ஐ. நா. வில் சீனவுக்கு அங்கத்துவமளிக்க வேண்டுமென்ற பிரேரணையை ஐ. நா. பொதுச் சபை முதல்தடவையாக விவாதிக்கவிருக்கிறது. சீனவுக்கு ஐ. நா. வில் அங்கத்துவமளிப்பது பற்றி பொதுச்சபைவிவாதிக்கவேண்டுமெனக்கோரி நியூஸிலந்து கொண்டுவந்த பிரேரணையையும் சீனவுக்கு ஐ. நா. வில் அங்கத்துவமளிக்க வேண்டுமென சோவியத் யூனியன் கொண்டுவந்த பிரேரணையையும் ஐ. நா. பொதுச்சபை ஆயத்தக்கமிட்டிஏற்றுக்கொண்டது.

21 அங்கத்தவர்களைக் கொண்ட ஐ. நா. ஆயத்தக்கமிட்டியில் நியூஸிலந்தின் பிரேரணையை 15 பேர் ஆதரித்தனர். பிரிட்டனும் அமெரிக்காவும் ஆதரித்து வாக்களித்தன. சோவியத்தின் பிரேரணைக்கு சாதகமாக ஏழு வாக்குகளும் எதிராக மூன்றுவாக்குகளும் கிடைத்தன. 10 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

கியூபாமீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டுள்ளதென்ற கியூபாவின் புகார் பற்றியும் ஐ. நா. பொதுச்சபை விவாதிப்பதற்கு ஆயத்தக் கமிட்டி ஒப்புக்கொண்டது.

# சமாதிக்கருகில் சாகும்வரை உண்ணுவிரதமிருப்பார்களாம்

கொழும்பு, வெள்ளி

"நீர்ப்பாசன இலாகாவினல் வேலை நீக்கம் செய்யப்பட்ட 123 தொழிலாளர்களுக்கும், திரும்ப வேலை கொடுக்கப்படாவிட்டால், எமது தலைவர்களில் இருவர், காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா அடக்கம் செய்யப்பட்ட ஹொறகொல்லைக் கல்லறைக் கருகில் சாகும் வரை உண்ணுவிரதமிருப்பார்கள்".

இவ்வாறு காணி விவசாய நீர்ப்பாசன இலாகாத் தொழிலாளர் சங்கம், பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயகாவுக்கு அறிவித்துள்ளது.

காணிவிவசாய நீர்ப்பாசன மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி, மேற்படி வேலை நீக்கம் செய்யப்பட்ட 123 தொழிலாளர்களுக்கும் வேறு இலாகாக்களில் ஜூன் மாதம் வேலை தேடிக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். ஆனல் தொழிலாளர் எவருக்கும் வேலை வழங்கப்படவில்லை என்று தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பதவியாவில் உண்ணுவிரதம் இருந்து வரும் இரு தொழிலாளர்களையும் உண்ணுவிரதத்தைக் கைவிடும்படி காணி விவசாய மந்திரி இலாகாத் தொழிலாளர் சங்கம் கேட்டுள்ளது.

## 25-ந் திகதி கப்பல் திருவிழா

பருத்தித்துறை, வெள்ளி

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாகர் கோவில் நாகர் தம்பிரான் ஆலய வருடாந்த உற்சவங்கள் நேற்றைய தினம் ஆரம்பமாகியது. இவ்வாலயத்தின்மகிமையைவிளக்கும்கப்பல் திருவிழா இம்மாதம் 25-ந் திகதி திங்களன்று நடைபெறும்.

## உப்பு கார்ப்பரேஷனில் ஊழியர் சிலர் வேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

தேசிய உப்புக் கார்ப்பரேஷனில் கடமையாற்றிவரும் தொழிலாளர் சிலரை வேலை நீக்கம் செய்வதெனத் தேசிய உப்புக் கார்ப்பரேஷன் தீர்மானித்துள்ளது. அம்பாந்தோட்டையிலுள்ள உப்பு நிருவாகி தொழிலாளர்களை வேலைநீக்கம் கோரும் கடிதங்களைத் தொழிலாளருக்கு வழங்குவார் என உப்புக் கார்ப்பரேஷனின் தலைவர் உப்புக் கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கத் தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளார். பத்திராஜத் துறைமுகத் திட்ட வேலைகளும், பங்கெலைத் தடாக வேலைகளும் நிறுத்தப்பட்டிருப்பதால் தொழிலாளர்களைக் குறைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று உப்புக் கார்ப்பரேஷனின் தலைவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் கடிதம் மேலும் கூறுவதாவது: இவ்வளவு காலமும் உப்புக் கார்ப்பரேஷன் சபை போதிய அளவு ஆட்களுக்கு வேலை வழங்கியுள்ளது. ஆனல் இவ்வாண்டு அக்டோபர் 1-ம் திகதி தொடக்கம் 15 தொழிலாளர்களுக்கு மட்டுமே உப்புக் கார்ப்பரேஷனல் வேலை வழங்க முடியும். ஏனைய 50 தொழிலாளர்களையும் கார்ப்பரேஷன் சபை வேலைநீக்கம் செய்யத் தீர்மானித்துள்ளது. இவர்களுக்கு வருடாந்தம் ஒவ்வொரு மாதச் சம்பளம் நஷ்டஈடாகவழங்கப்படும். தொழிலாளர் மேலும் தேவைப்படும் காலங்களில் இவர்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படுவர்"

இதுபற்றி கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார மந்திரியும் அறிவித்துள்ளார். அதிகரிகால சேவையின் அடிப்படையிலேயே 15 தொழிலாளரும் தொடர்ந்து சேவையாற்ற விடப்பட்டுள்ளார்கள்.

## முதலியார் அத்தியார் அ. அருணசலம் ஜே. பி.

தோற்றம் — 1885 — மறைவு 22-9-61

யாழ்ப்பாணத்து நீர்வேலியில் புகழ்பூத்த வேளாண் குடியில் 1885-ம் ஆண்டு அருணசலத்துக்கு மூத்த புத்திரனக அவதரித்தார். 22 வயதில் கொழும்பு கொம்மோர்சல் கம்பனியில் சேர்ந்து 60 வயது வரையும் கடமையாற்றினர்.



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியைத் தம் சொந்தச் செலவில் ஸ்தாபித்து லட்சக் கணக்கான ரூபாய்க்கு அதன் பேரில் காணிகளும்வாங்கி பாடசாலையின் தரத்தை உயர்த்தவும்உழைத்து இன்று வலி - கிழக்கில் சிறந்த இந்துக் கல்லூரியாகத் திகழ உழைத்த பெருமை இவரைச்சாரும். தேவாலயங்களில் புராண படனமோதிவழிபாட்டுக்குவழிகாட்டியாகவும் திகழ்ந்தார், நீர்வேலிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சிகரட் புகையிலை உற்பத்திச் சங்கம நீர்வேலி கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவிருந்து சிறந்த பணியாற்றினர். வடபகுதி விளைபொருள் உற்பத்திச் சமாசத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும்போது மூளையில் ஏற்பட்ட இரதசப பெருக்குக் காரணமாக அகால மரணமெய்தினர்.


வெற்றிகரமான 4-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 230

என். டி. ராமராவ், சௌகார் ஜானகி
நடித்த

ராஜசேவை


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.